23 MAR 1999


# உதயன்

விலை ரூபா 6-00

சுகர் 14 வள்ளுவர் ஆண்டு 2030 பங்குனி 08 திங்கட்கிழமை (22-03-1999) UTHAYANA Lively National Tamil Daily கதிர் 98


## முல்லைத்தீவில் கிபிர் 2ஆம் நாளாகத் தாக்கு!

### மாணவி கொல்லப்பட்டார்

வவுனியா, மார்ச் 22

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புப் பகுதியில் இரண்டாவது நாளாக நேற்று இடம் பெற்ற கிபிர் தாக்குதலில் மாணவி ஒருவர் உயிரிழந்தார் என வவுனியாவுக்குக்கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மாணவியான குகதாசன் பிரனிதா (14 வயது) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து முல்லைத்தீவில் வசித்து வரும் பிரேமநாதன் சந்திர குமாரி (45 வயது) என்பவர் காயமடைந்து புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (இ-3-21)

## கிழக்கு உள்ளூராட்சி தேர்தல் கட்டம் கட்டமாக நடக்கும்

மட்டக்களப்பு, மார்ச் 22

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சிச் சபைகளுக்கு கட்டம் கட்டமாகக் தேர்தல் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல்களுக்கு பாதுகாப்பு வழங்க போதிய படையினர் இல்லாமையே இப்படி முடிவு எடுக்ககாரணம் எனக் கூறப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் முதலில் தேர்தலை நடத்தவும் —

அடுத்து திருகோணமலையிலும் —

பின்னர் மட்டக்களப்பிலும் — நடத்தவும் முடிவுசெய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

ஒன்றாக சகல மாவட்டங்களிலும் தேர்தல் நடத்தினால் பாதுகாப்பு வழங்குவதில் சிக்கல் ஏற்படும் என்று கருதியே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

வவுனியா, மன்னார் மாவட்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தள்ளாடி முகாம் மீதான தாக்குதலில் நவீன ரக றொக்கெட் லோஞ்சர்கள்!

## படை வட்டாரங்கள் அதிர்ச்சி

கொழும்பு, மார்ச் 22

தள்ளாடி இராணுவ முகாம் மீது கடந்த புதன்கிழமை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் நவீன றொக்கெட் லோஞ்சர்கள் பயன்படுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் புலிகள் ஒன்றுக்கு மேற்பட்ட பரல்களை உடைய றொக்கெட் லோஞ்சர்களை (எம். பி. ஆர். எல்.) பயன்படுத்தியதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈழ யுத்தத்தில் இத்தகைய றொக்கட் லோஞ்சர்கள் முதன் முறையாகப் பயன்படுத்தப்பட்டமை குறித்துப் படை வட்டாரங்கள் அதிர்ச்சி அடைந்திருப்பதாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

தள்ளாடி முகாம் மீது கடந்த புதன்கிழமை மாலை 6.15 மணி முதல் இரவு 10.45 மணி வரை நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 80 க்கு மேற்பட்ட ஷெல்களைப் புலிகள் பொழிந்தனர் என்றும் — பெரும்பாலான ஷெல்கள் முகாமின் ஒரு பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த டிரக்குகளைக் குறிவைத்தே ஏவப்பட்டன என்றும் — படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த டிரக்குகளில் இறக்கப்படாத நிலையில் பல கோடி ரூபா பெறுமதியான பல வகைப்பட்ட மோட்டார் ஷெல்கள் இருந்தன.

நவீன றொக்கெட் லோஞ்சர்கள் மூலம் ஏவப்பட்ட 120 எம். எம்., 122 எம்.எம். ஆட்லறி ஷெல்கள் முகாமுக்குள் விழுந்து வெடித்தபோது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தள்ளாடி முகாமிலிருந்து ஷெல்வீச்சுத்தொடர்கிறது

வவுனியா, மார்ச் 22

மன்னார் தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் இடம்பெறுவதால் மக்கள் இடம்பெயர்ந்த வண்ணம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

விடத்தல்தீவு, பாப்பா மோட்டை, அடம்பன், பள்ளமடு, நட்டாக்கண்டல் பகுதிகளில் இருந்தே மக்கள் இடம் பெயர்கின்றனர் என்று கூறப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்கள் தங்க வசதியின்றி பாடசாலைகள், கோயில்கள் ஆகியவற்றில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

அவர்களுக்கு 3 நாள்களுக்கு சமைத்த உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-3)

## கலுத்துறைக் கைதிகளில் ஒருவர் நிலை கவலைக்கிடம்

கொழும்பு, மார்ச் 22

களுத்துறைச் சிறைச்சாலை கூரையில் உண்ணாவிரதம் இருந்து வருபவர்களில் சுப்பையா பாலகுமார் என்பவரின்உடல்நிலை மோசமடைந்துள்ளதாக நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

தம்மீதான வழக்கு விசாரணைகள் தாமதப்படுவதை கண்டித்து சிறைச்சாலைக் கூரைக்கு மேல் ஏறி கடந்த ஏழு நாள்களாக அவர் உண்ணாவிரதம் அனுஷ்டித்து வந்தார் என்றும் —

தற்சமயம் அவரது உடல் நிலை மோசமடைந்துள்ளது என்றும் — தெரிவிக்கப்பட்டது. அவரது உண்ணாவிரதம் குறித்து தகவல் நேற்று முன்தினம் வரை வெளியிடப்படாது வைக்கப்பட்டிருந்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 1,216 பயணிகளுடன் 'லங்கா முடித்த' கப்பல் இன்று யாழ். புறப்படும்

திருகோணமலை, மார்ச் 22

திருகோணமலைக்கு நேற்றுக் காலை வந்துசேர்ந்த 'லங்கா முடித்த' கப்பல் ஒரு தொகுதி பயணிகளுடன் இன்று மாலை காங்கேசன்துறை நோக்கிப் புறப்படவிருப்பதாகத் திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரிவுப் பிரதேசச் செயலர் வேலும் மயிலும் தெரிவித்தார்.

இந்தக் கப்பலில் அகதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் படையினருக்கு வீடமைப்புத் திட்டம்

### லீவில் செல்வோர் வருகிறார்கள் இல்லையாம்

கொழும்பு, மார்ச் 22

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் படையினருக்கென வீடமைப்புத் திட்டம் ஒன்றை உருவாக்கப் பாதுகாப்பு அமைச்சு திட்டமிட்டுள்ளதாக அறியவருகின்றது என்று கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் படையினர் விடுமுறையில் தமது வீடுகளுக்குச் சென்றுவிட்டு பின்பு கடமைக்குத் திரும்பாமல் விடுவது அடிக்கடி இடம் பெற்றுவருவதாகவும் —

இதனை தடுப்பதற்காகவே இந்த வீடமைப்புத்திட்டத்தைப் பாதுகாப்பு அமைச்சு அமுல் படுத்தஉள்ளதாகவும் — கூறப்படுகின்றது.

இந்த வீடமைப்புத் திட்டம் எங்கு அமையும் என்ற விவரம் வெளியிடப்படவில்லை. (இ—3—10)

## திருமலை-காங்கேசன்சேவை

## கப்பல்களை வழங்க 18 நிறுவனங்கள் விருப்பம்

கொழும்பு, மார்ச் 22

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் அரசாங்கம் நடத்த உத்தேசித்துள்ள பயணிகள் கப்பல் சேவைக்கு கப்பல்களை வழங்க 18 கப்பல் நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

இந்தச் சேவைக்காக இரு கப்பல்களைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் கேள்விப் பத்திரம் கோரியிருந்தது.

இந்தச்சேவைக்கான கப்பல்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ அமைப்பாளரின் சகோதரன் கொலை

### பம்பைமடுவில் சம்பவம்

வவுனியா பம்பைமடுப்பிரதேச ரெலோ அமைப்பாளரின் சகோதரன் அவரது வீட்டில் இருந்து கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

பம்பைமடுவைச் சேர்ந்த சரவணமுத்து இராசநாயகம் [வயது 33] என்பவரே உயிரிழந்தவராவார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டு விழா

யாழ். மறைமாவட்ட திருவழிபாட்டு நிலையத்தின் ஏற்பாட்டில் 'விடியலின் கீதங்கள்' என்னும் புதிய பாடற் புத்தக வெளியீட்டு விழா இன்று காலை 10. 15மணிக்கு யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெறும்.

யாழ். ஆயர் பேரருள் திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆசியுரை வழங்குவார்.

# இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 22

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை பிற்பகல் 2-00மணிக்குப் பாடசாலை அதிபர் த. அழகரத்தினம் தலைமையில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

நல்லூர், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

★ ★ ★

கைதடி குருசாமி வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல்2-00மணிக்கு அதிபர் சு. சேய்சோதி காந்தன் தலைமையில் கயிற்றசிட்டி முருகன் ஆலய முன்றலில் நடைபெறும்.

தென்மராட்சிக் கல்வி வலயப்பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்

(க—74—133)

★ ★ ★

நுணாவில் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை அதிபர் திருமதி த. குலசேகரம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. யோகானந்தா கலந்து கொள்வார்.

(க—15)

★ ★ ★

குருநகர், மார்ச் 22

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் சி. தங்கவேல் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா.தணிகாசலம்பிள்ளை முதன்மை விருந்தினராகவும், யாழ். வலயக் கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் நா. வரதராசா, இ. சிவஞானசுந்தரம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

(இ-51)

# பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், மார்ச் 22

உலக உணவு விவசாய நிறுவனத்தின் ஏற்பாட்டில் அரச உத்தியோகத்தர்களுக்கான இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை இன்றும் நாளையும் திருநெல்வேலி விவசாயப் பாடசாலையில் நடைபெறும்.

(இ-86)

# மரண அறிவித்தல்கள்

## சின்னப்பு வெலிச்சோர்

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் இராசேந்திரா வீதியை வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பு வெலிச்சோர் அவர்கள் 21-03-1999 இல் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வெலிச்சோர் அன்னத்தின் அன்புக் கணவரும் ஜோசேப், லீலா, மலக்கியாஸ், எமலியானூஸ் (ஜேர்மனி), பாமா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜோசேப்பின் (தங்கராணி), காலஞ்சென்ற முடியப்பு, ஜசிந்தா, ஜெயவதி (ஜேர்மனி), தெய்வேந்திரம் (சுவீஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிமால், ஜொனி, கிளனி, றட்சன், சுபா, சுமன், சுமி, சனா, நிதிலா, நிவேதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-03-99) திங்கடகிழமை பிற்பகல் 3-30 மணியளவில் (புதிய நேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வெ. ஜோசேப்
(மகன்)

31, இராசேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்

(64072)

## திருமதி மகேஸ்வரி மாசிலாமணி

வறுத்தலை விளானைப் பிறப்பிடமாகவும் தற்போது இராசவீதி திருநெல்வேலியில் வசித்தவருமாகிய திருமதி மகேஸ்வரி மாசிலாமணி 20-03-99 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தம்பையா மாசிலாமணியின் அன்பு மனைவியும், வாசுதேவன் [ஜேர்மனி], புனிதவதி [வவுனியா], மணிவாசகன் [லண்டன்], பகவதி, பகீரதி [ஆசிரியை, கொழும்பு], மருதமூர்த்தி[கனடா], வீதிவிடங்கன் [டென்மார்க்], சண்முகப்பிரியா, வளர்மதி [கனடா] ஆகியோரின் அன்புத் தாயாரும், மல்லிகாராணி [ஜேர்மனி], குகேஸ்வரன்[மருந்தாளர், இரத்தினபுரி], லதாதேவி [லண்டன்], கலியுகவரதன் [கிராம உத்தியோகத்தர்], தர்மராஜா [கொழும்பு], பாலஈஸ்வரி [கனடா], ஜெயராணி [டென்மார்க்], பால சிங்கம் [ஹற்றன் நஷனல் வங்கி], திருலோகநாதன் [கனடா] ஆகியோரின் மாமியாரும் நாராஜனதாஸ், காலஞ்சென்றவர்களான கனககுமரையா, சதாசிவம் ரத்தினம், இலங்கைநாயகம், பரஞ்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21-03-99 அன்று மாலை 3-00 மணி அளவில் நடைபெற்று, திருநெல்வேலி செம்பாடு மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
க. கலியுகவரதன்
கிராம உத்தியோகத்தர்
[கப்பல், விமான சேவை]
செ பாலசிங்கம்
[ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்]

இராசவீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
[கோப்பாய் பொலீஸ் நிலையம் அருகில்]

[64071]

## திருமதி சிவபூபதி கனகசிங்கம்

சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் லண்டனில் வசித்தவருமான திருமதி சிவபூபதிகனகசிங்கம் 17-3-99 அன்று லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முகாந்திரம்முத்தையா (இளைப்பாறிய தபாலதிபர்), பரிபூரணம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற வினாசித்தம்பி தம்பதிகளின்(பாண்டியன்தாழ்வு) அன்பு மருமகளும் காலஞ்சென்ற கனகசிங்கத்தின் (இளைப்பாறிய உப அதிபர், பரமேஸ்வராக் கல்லூரி) அன்பு மனைவியும் லண்டனில் வசிப்பவர்களான Dr. நந்தபாலன், Dr நிர்மலா ஆகியோரின் அன்புத் தாயாரும் லண்டனில் வசிப்பவர்களான கல்யாணி, Dr. சுபானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும், லண்டனில் வசிப்பவர்களான அர்ச்சுனா, அபிராமி, மீரா, பிரசாந்த் ஆகியோரின் அன்புப் பாட்டியும், காலஞ்சென்றவர்களான தனபால சூரியர், சிவபாக்கியம், முத்துபாலசூரியர், ரட்னபூபதி, ரட்னபாலசூரியர், சங்கர பாலசூரியர், சண்முக பாலசூரியர். சரவணபாலசூரியர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20-03-99 சனிக்கிழமை லண்டனில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி கலாவதி சுப்பிரமணியம்
(மருமகள்)

26, காட்டுக் கந்தோர் வீதி,
யாழ்ப்பாணம்.

(64068)


# லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி

இன்று

கார்த்திக் - சௌந்தர்யா
கவுண்டமணி - செந்தில்
நடித்த

முத்துக்காளை

காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரம்)

FAX No. 070 - 212223
0094 - 70-212223

(63915)

# நாகம்ஸ்

சுன்னாகம்.

விஜய், விஜயகாந்த்,
யுவராணி, கௌதமி
நடித்த

செந்தூரபாண்டி

புதிய நேரப்படி காட்சிகள்
11-00, 2-30

(64042)

# ராஜா

யாழ்ப்பாணம்.

கடைசி வாரமாக

கார்த்திக் - தேவயானி
ரசிகா, அஞ்சு அரவிந்த்
ஜனகராஜ், மணிவண்ணன்
மற்றும் பலர் நடித்த

(U) உதவிக்கு வரலாமா

இன்று காட்சிகள்
10-30, 2-30.

(66845)


# மரண அறிவித்தல்கள்

## பொன்னம்பலம் இராஜதுரை

(இளைப்பாறிய உள்ளக கணக்குப் பரிசோதகர், இ. போ. ச. கோண்டாவில்)

கல்வியங்காடு கட்டைப்பிராயைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய உத்தியோகத்தர் (இ. போ. ச.) பொன்னம்பலம் இராஜதுரை 18-03-99 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்- இராசம்மா தம்பதிகளின் இளைய அன்புப் புதல்வரும், புவனேஸ்வரியின் [இந்திராணி] அன்புக் கணவரும் கனடாவில் வசிப்பவர்களான வசந்தகுமார், வசந்தகுமாரி, தயாளன், தயாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கனடாவில் வசிப்பவர்களான சிவராணி, மனோகரன், சிறீராகவன், தயாளினி ஆகியோரின் அன்புமாமனாரும், இளைப்பாறிய அதிபர் பொன்னம்பலம் சபாரட்ணம் [அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை] அவர்களின் அன்புச் சகோதரரும் சரஸ்வதியின் அன்புமைத்துனரும், குகானந்தன், குகராணி, இந்திராணி, ஜெயராணி [கனடா], பிறேமராணி [கனடா], சிவானந்தன் [கனடா], நிர்மலராணி ஆகியோரின் சிறியதந்தையும், மனோகரி, பாலசுப்பிரமணியம் [சேவிஸ் நிலைய உரிமையாளர், சுன்னாகம்], யோகேஸ்வரன் [உப அதிபர், கோண்டாவில் மகாவித்தியாலயம்], சிவபாலன் [கனடா], நல்லைநாதன் [கனடா], வத்சலாதேவி [கனடா], சிவநேசன் [உப அதிபர், சைவப்பிரகாச வித்தியாலயம், கந்தர்மடம்] ஆகியோரின் இளைய மாமனாரும், கனடாவில் வசிப்பவர்களான கபிலா, லஜிலா, திஷானி, தீபிகா, ஜெனிக்கா, ஜெனாந்தன், மிஷாந்த், கஜனி, கீர்த்தி, றொபினி மற்றும் துஷ்யந்தி- முகுந்தன் [விரிவுரையாளர் யா/ தொழில் நுட்பக் கல்லூரி], கோபி [லண்டன்], பிரியந்தி - பிரதீபன் [கொழும்பு கோட்டை புகையிரத நிலைய அதிபர் தரம்- II], முரளி [சென் பற்றிக்ஸ் கல்லூரி], கிஷோன், கௌஷிகன், கவிந்தன், நிர்மலன் [கனடா], விமலன் [யாழ் பல்கலைக்கழகம் உடற்கல்வித்துறை], நித்தியா, வித்தியா[யாழ். இந்து மகளிர் கல்லூரி], அபிரா, அபிநயன் [கனடா], சந்துரு, சிந்துஷா [கனடா], சாமிதா, அட்வன் [கனடா] நிதர்சன் [யா/ இந்துக் கல்லூரி], நீரயா [யா/ இந்து மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புப் பேரனும் நிஷங்கியின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22-3-99 காலை 10 மணிக்கு சென். ஜேம்ஸ் மயானத்திற்கு [கனடா] எடுத்துச்செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும். அதேதினம் கோண்டாவில் மேற்கில் [இராசேந்திரன் மில் ஒழுங்கை] உள்ள அன்னாரின் மைத்துனியாகிய பாலசுப்பிரமணியம்-யோகராணியின் இல்லத்தில் துக்கம் அநுஷ்டிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்
கெ. பாலசுப்பிரமணியம்
(றோயல் சேவிஸ் ஸ்ரேசன் சுன்னாகம்.)

''வாகினி''
சிங்கராயர் ஒழுங்கை,
கல்வியங்காடு.
T. P. No 070- 212259

(64065)

## திருமதி ராஜா தில்லையாச்சி

சுழிபுரம் மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ராஜா தில்லையாச்சி 21-03-99 நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வடிவேலுவின் அன்புச் சகோதரியும் திருமதி சண்முகலிங்கம் விஜயலட்சுமி, திருமதி தேவானந்தம் நாகரத்தினம் (U K) ஆகியோரின் அன்பு மாமியாரும் வளர்ப்புத் தாயாரும் திருமதி சிவாஜினி நாகேஸ்வரலிங்கம் (U K), திருமதி யோகா தவலிங்கம் (U K), திருமதி மீரா மனோகரன் (U.K) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் U Kயிலுள்ள பிருந்தா, ஹரி, கோமேஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-03-99) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுழிபுரம் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ச. விஜயலட்சுமி

சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.

(64075)

## சின்னச்சாமி பாலசுப்பிரமணியம் (பாலு)

சின்னச்சாமி பாலசுப்பிரமணியம் (பாலு) அவர்கள் 21-03-99 நேற்றுக் காலமாகி விட்டார்.

அன்னார் சின்னச்சாமி புவனேஸ்வரி தம்பதிகளின் புத்திரனும், மனோன்மணியின் அன்புக் கணவரும் நிரஞ்சனா, நிரஞ்சன், அனுஷா, தேவிகா, டயஸ் மாறன் ஆகியோரின் அன்புத் தந்தையும் வேலாயுதம், பாக்கியம் தம்பதிகளின் மருமகனும், கமலாதேவி, கனகரட்ணம், குணரட்ணம், தவம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் வேல்நாதன், அமுதாதேவி, பரமேஸ்வரி, ஜெயதேவி, தட்சனாமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (22-03-99) திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
பா. நிரஞ்சன்
(மகன்)

கல்வயல்,
சாவகச்சேரி.

(64073)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இராணுவ நடவடிக்கைகளால்

# பாடசாலைகளில் ஏற்பட்ட இழப்புகளை உறுதிப்படுத்த விசாரணைச் சபை

வலிகாமம் தெற்கு, மார்ச் 22

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளால் பாடசாலைகளில் ஏற்பட்ட இழப்புக்களை உறுதிப்படுத்த முடியாத நிலையில், பதவியில் இருந்து ஓய்வுபெற்றும் ஓய்வூதியப் பணிக்கொடைகளையோ, ஓய்வூதியத்தையோ இதுவரை பெற்றுக்கொள்ள முடியாதிருக்கும் அதிபர்களுக்கு அவற்றை வழங்குவதற்கான நடைமுறைகளையும் பணிப்புரைகளையும் சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் வடக்கு—கிழக்கு மாகாண கல்வி கலாசார அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா அனுப்பி வைத்துள்ளார்.

இவ்வாறான இழப்புக்கள் தொடர்பாக இறுதி அறிக்கை ஒன்றைத்தயாரிக்க ஒவ்வொரு பாடசாலைக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் மூவரைக் கொண்ட விசாரணைச்சபையொன்றை காலதாமதமின்றி கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்க வேண்டும் என அவர் அறிவுறுத்தி உள்ளார். அதற்கமைய கல்வி வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள் விசாரணைச் சபைகளை நிறுவி உள்ளனர்.

விசாரணைச் சபையினர் ஒருவார காலத்துக்குள் தமது விசாரணைகளை மேற்கொண்டு, இழக்கப்பட்ட பொருள்களின் விவரங்கள், மாகாண நிதிப் பிரமாணங்களுக்கமைய அவற்றின் பெறுமதிகள், இவ்விழப்பு தொடர்பான தமது இறுதி அறிக்கை ஆகியவற்றை வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் சமர்ப்பிக்க உள்ளனர்.

இழப்பு நிகழ்ந்தபோது குறிப்பிட்ட பாடசாலையில் இருந்ததாகக் கருதப்படும் பொருள்கள் பற்றிய விவரங்களை, அதிபர், பிரதி அதிபர், பகுதித் தலைவர், பாடங்களுக்குப் பொறுப்பாக இருந்த ஆசிரியர்கள், காவலாளி, பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள் மூலம் விசாரணைச் சபையினர் பெற்றுக்கொள்ள உள்ளனர்.

மேற்படி இழப்புக்கள் காரணமாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடிய முறையில் பொருள் பதிவேடுகளோ, ஆவணங்களோ எதுவும் இல்லாத காரணத்தால் பாடசாலைகளில் கடமையாற்றி ஓய்வு பெற்ற பல அதிபர்களுக்கான ஓய்வூதிய பணிக்கொடைகளையோ, ஓய்வூதியங்களையோ நீண்டகாலம் வழங்கமுடியாதிருந்தது.

இக்குறைபாட்டை சுட்டிக்காட்டி, ஓய்வுபெற்ற அதிபர்கள் சங்கம் ஓய்வூதிய பணிக்கொடைகளையோ, ஓய்வூதியத்தையோ அதிபர்களுக்கு வழங்கும் செயற்பாட்டைத் துரிதமாக்கும்படி அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தது.

குறிப்பிட்ட பாடசாலைகளில் ஏற்பட்ட இழப்பு ஐந்து லட்சம் ரூபாவுக்கு உட்பட்டதாக இருப்பின் இவ்விழப்பு இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்டது எனவும், இதன் பொறுப்பை எவர்மீதும் சுமத்தமுடியாது எனவும் அவற்றைப் பதிவு அழிப்பதற்கு விசாரணை சபை சிபார்சு செய்யும் சந்தர்ப்பத்தில் ஓய்வுபெற்ற அதிபர்களுக்கான ஓய்வூதிய பணிக்கொடைகளை அல்லது ஓய்வூதியத்தை உடனடியாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கல்வி அமைச்சின் செயலாளர் சு. டிவகலாலா யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

(ஐ-152)

### நெல்லியடி நகரில்

## வீதியோரக் கடைகள் அகற்றப்படுகின்றன

நெல்லியடி, மார்ச் 22

நெல்லியடி நகரில் வீதி விபத்துக்களைத் தவிர்க்கும் வகையில் வீதி ஓரங்களில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கடைகள் அகற்றப்பட்டு வருகின்றன.

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த நடவடிக்கையினால், நெல்லியடிப் பகுதியில் வீதி விபத்துக்கள் குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை —

நெல்லியடிச் சந்தைக்கு முன்புறம் அமைக்கப்பட்டிருந்த சைக்கிள் பாதுகாப்பு நிலையமும் அகற்றப்பட்டு சந்தையின் உட்புறம் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

## கடைகளுக்கு முன்னால் உள்ள கொட்டகைகள் அகற்றப்படுகின்றன

அச்சுவேலி, மார்ச் 22

அச்சுவேலி பஸ்நிலைய வீதியோரத்தில் அமைந்துள்ள வியாபார நிலையங்களுக்கு முன்பாக தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த கொட்டகைகள் அகற்றப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி, நகர அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு வியாபார நிலையங்களுக்கு முன்பாக உள்ள கொட்டகைகளை அகற்றுமாறு வலி. கிழக்கு பிரதேச சபை அறிவித்திருந்தது.

அறிவித்தலுக்கு அமைய பெரும்பாலான வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக இருந்த கொட்டகைகள் அகற்றப்பட்டுள்ளன. (இ-11)

## 30 இளம் விதவைகளுக்கு ஆடை தயாரிக்கும் பயிற்சி

வலிகாமம் தெற்கு, மார்ச் 22

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் குடும்பத் தலைவனை இழந்த முப்பது வயதுக்குடபட்ட இளம் விதவைப் பெண்களுக்கு எதிர் வரும் ஏப்ரல் மாதத்தில் ஆடைகள் தயாரித்தலில் தையல் பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

சுயதொழில் வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் மேற்படி பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

இது சம்பந்தமாக கைத்தொழில் அபிவிருத்தி சபையின் உயர் அதிகாரிகள், நுண் கருத்திட்ட முயற்சிகளின் பயிற்சியாளர் திருமதி ஐராணி பெனான்டோ ஆகியோர் வலிகாமம் தெற்கு பிரதேச செயலக அதிகாரிகளுடன் கலந்துரையாடி உள்ளனர்.

இது தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் த. தேவராஜன், மற்றும் செயலக அதிகாரிகள், கிராம சேவையாளர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி கூட்டத்துக்கு வருகை தந்திருந்த இப் பிரதேசத்தில் வாழும் குடும்பத் தலைவனை இழந்த 37 விதவைப் பெண்களுடன் உயரதிகாரிகள் கலந்துரையாடி அவர்கள் பயிற்சி பெற விரும்பும் தொழில் துறைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

சுமார் இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட இளம் பெண்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் குடும்பத் தலைவர்களை இழந்து வருமானமற்ற நிலையில் கஷ்டமான வாழ்க்கை மேற்கொண்டு வருவதாகவும் இவர்களுக்கு சுயதொழில் முயற்சி பெறும் நோக்குடன் ஆடை தயாரித்தல், உணவு தயாரித்தல், கருவாடு பதனிடல், பழங்கள் பதனிடல், தும்புத்தொழில், பேக்கரி தொழில் போன்றவற்றில் பயிற்சிகள் வழங்கி சுயதொழிலை ஊக்குவிப்பதுடன் தொழிலுக்குத் தேவையான நிதி வசதியை கடனடிப்படையில் கைத்தொழில் அபிவிருத்திச்சபைஊடாகப் பெற்றுத்தர முயற்சிக்கப்படும் எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

(ஐ-152)

### ஊழியர்கள் விசாரணை

அச்சுவேலி, மார்ச் 22

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டது தொடர்பாக அன்றுகடமையில்இருந்த வைத்தியசாலை ஊழியர்கள் உள்ளக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கடமையில் இருந்த ஊழியர்கள் மீதானவிசாரணையை வைத்தியசாலைப்பொறுப்பதிகாரி ஊடாக சுகாதாரப் பகுதியினர் நடத்தி வருகின்றனர்.

(ஐ -11)

### வீதி பலத்த சேதம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

கரணவாய் தெற்கு, வெற்றிலைக்காடு விபுலானந்தர் வீதி மிக நீண்டகாலமாக திருத்தப்படாத நிலையில் குண்டுங் குழியுமாக போக்குவரத்துக்கு உதவாத நிலையில் உள்ளது.

பருத்தித்துறை— யாழ்ப்பாணம் வீதியையும் கரணவாய்— மண்டான்— உப்புமால் வீதியையும் இணைக்கும் சுமார் 2 மைல் நீளமான இவ் வீதி சேதமடைந்துள்ளதால் அப்பகுதி வாழ் மக்கள் போக்குவரத்தின் போது பல சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

முக்கியமாக இப்பகுதியில் இருந்து பிரதான பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் பிரயாணத்திற்கு சைக்கிளையே பாவிக்கவேண்டிய நிலை இருப்பதால், மாணவர்கள் இவ் வீதியின் சீர்கேட்டால் அடிக்கடி விபத்துக்களைச் சந்திக்கவேண்டியுள்ளதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-15)

கலட்டி வளவு

**மாரி அம்மன் கோயில்**

நவாலி வடக்கு, மானிப்பாய்.

அம்பிகை அடியார்களே!

மேற்படி ஆலயம் புனருத்தாரணம் செய்து கட்டடத் திருப்பணி நடைபெற உள்ளதால் அடியவர்கள் தங்களால் இயன்ற பங்களிப்புச் செய்து தாயார் அருள் பெற்று உய்வடையும்படி கேட்டுக் கொள்கிறேன்.

க. சண்முகநாதன்
உரிமையாளரும், பூசகரும்.

[63940]

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா இலங்கையர்

(ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)

மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்காலிகமாக உடுவிலை வதிவிடமாகக் கொண்டவருமான க. இலங்கையர் அவர்கள் 21 - 03 - 99 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற உருக்குமணியின் அன்புக் கணவரும், காலம்சென்றவர்களான இலங்கைதாயகம் (ஆசிரியர் மான் மகா வித்தியாலயம் உடுவில்), பேரின்பநாயகம், அருமைநாயகம் ஆகியோரின் அன்புத் தந்தையும் அரசின்பமதி (கனடா) சத்தியசுலோசனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும். அன்ரன் அஜந்தராஜ் (யாழ்ப்பாணக்கல்லூரி) உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்களான அன்ரனீற்றா, கிருசலின் அனிற்றா அனோஜலினா, கிருசாலினி (கனடா) ஜெயக்காந் (கனடா) ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி, காலஞ்சென்ற மார்க்கண்டன், வை. தவமணி (கொழும்பு), ஜெயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ம.சின்னையாவின் (ஆசிரியர்) மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை திங்கட்கிழமை (22 - 03 - 99) காலை 10.00 மணிக்கு உடுவிலில் நடைபெற்று குடும்பமயானமான மாகியப்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**அன்ரன் அஜந்தராஜ்.**

உடுவில் மகளிர் கல்லூரி மேற்கு வீதி,
உடுவில்,
சுன்னாகம்.

(64064)

## வேலு அப்புக்குட்டி

இளவாலை மாரீசன்கூடலைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட வேலு அப்புக்குட்டி 20. 03. 99 அன்று காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும், நற்குணம், திருச்செல்வம், யோகநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், முல்லைக்கொடி, பாக்கியலட்சுமி தவராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22. 3. 99 இன்று காலை 11 மணியளவில் உரும்பிராய் வடக்கு கிரியன் தோப்பில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மொண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:—
**திரு. சந்திரசேகரம்**
[ மருமகன் ]
**திருமதி சந்திரசேகம் பவளம்**
[ பேறாமகள் ]

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

[64055)

## திருமதி சந்திரவதனா நித்தியானந்தன்

கலைமன்ற வீதி, புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி. சந்திரவதனா நித்தியானந்தன் அவர்கள் 20- 3- 99 அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் ச. நித்தியானந்தனின் அன்பு மனைவியும், பிரியாவின் (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை பருத்தித்துறை) பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சந்திரசேகரம், திருமதி சந்திரசேகரம் இராசம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், திரு. திருமதி. குமாரவேலுவின் அன்பு மகளும், Dr. மதியழகன் (கொழும்பு), மகேந்திரன் (ஆஸ்திரேலியா), மணிவண்ணன் (டென்மார்க்), சந்திரகௌரி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தாமரைச்செல்வி (கொழும்பு), சுலோசனா (ஆஸ்திரேலியா), வேணி [டென்மார்க்], ஜெயசீலன் [ஆஸ்திரேலியா] திருமதி. குகராஜன் வாசுகி [ஆஸ்திரேலியா], திருமதி. நந்தகுமாரன் சீதாதேவி [கனடா], திருமதி. நல்லைநாதன் சந்திரா [ஜேர்மனி], திருமதி. இராமச்சந்திரன் சுமதி, [கனடா], இளங்கோவன் [ஜேர்மனி] ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22-3- 99 இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**ச. நித்தியானந்தன்**
**நி. பிரியா**

கலைமன்ற வீதி,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(64056)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புதனன்று இந்தியா சென்ற

# பெருமாள் மீண்டும் இலங்கை வருவார்

கொழும்பு, மார்ச் 22

கடந்த ஒரு மாதகாலமாக கொழும்பில் தங்கி இருந்த வடக்கு — கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் ஈ. பி. ஆர். எல். எவ் முக்கிய பிரமுகருமான வரதராஜப் பெருமாள் கடந்த செவ்வாய், புதன் கிழமைகளில் நடைபெற்ற கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின் புதன்கிழமை இரவு இந்தியா பயணமானார். இந்தியா சென்றுள்ள அவர் இரண்டு வாரங்களுக்குள் இலங்கை திரும்பி மீண்டும் முழுநேர அரசியலில் ஈடுபடுவார் என ஈ. பி. ஆர். எல். எவ். இயக்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஈ. பி ஆர், எல். எவ். இயக்கத்தின் ஆயுதப் படையைமீண்டும் உருவாக்கி பலம் வாய்ந்த ஆயுதப்படையொன்றை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற யோசனையை மத்திய குழுக்கூட்டத்தில் வரதராஜப் பெருமாள் தெரிவித்ததாகவும், அந்த யோசனைக்கு மத்திய குழுக் கூட்டத்தில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டதனால் அந்த யோசனை நிராகரிக்கப்பட்டது என்றும் கொழும்புச் செய்தி வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

# கிளிநொச்சி மாணவருக்கு இலைக்கஞ்சி வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 22

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் ஆறாந்தர மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 73 பாடசாலைகளில் 40பாடசாலை மாணவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியமும்

ஏனைய பாடசாலை மாணவர்களுக்கு மனித முன்னேற்ற நடுநிலையம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்பனவும் —

இலைக்கஞ்சியை வழங்கி வருகின்றன. (ஐ-17)

## ஊர்காவற்றுறையில் விசாரணை

காரைநகர், மார்ச் 22

1996 ஆம் ஆண்டுக்கு முன்னர் தீவுப்பகுதியில் காணாமற் போனோர் பற்றிய விசாரணை ஊர்காவற்றுறை பிரதேச சபை அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் காணாமற் போனோர் பற்றி விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் 14 பேர் கொண்ட குழுவினரே விசாரணைகளை மேற்கொண்டனர். (ஐ-73)

## நெடுந்தீவில் சிவதீட்சை

நெடுந்தீவு, மார்ச் 22

நீண்ட நாள்களின் பின் நெடுந்தீவில் சைவசமய தீட்சை வழங்கும் வைபவம் நடைபெற்றது.

நெடுந்தீவு மேற்கு ஸ்ரீ பிடாரி அம்பாள் ஆலயத்தில் அறுபது பேரும் நெடுவினி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் நாற்பது பேருமாக மொத்தம் நூறு பேர் சிவ தீட்சை பெற்றனர். (ஐ - 111)

# யாழ். அனுப்பப்பட இருந்த பஸ்கள் வேறு மாவட்டங்களின் தேவைக்கு?

யாழ். குடாநாட்டிற்கு கப்பல் மூலம் அனுப்புவதற்காக கொழும்புத் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பத்து புதிய பஸ்களும் பாதுகாப்பு அமைச்சினால் வேறு மாவட்டத் தேவைகளுக்கென எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது,

இதில் ஐந்து பஸ்கள், அண்மையில் படையினரால் வன்னிப் பகுதியில் கைப்பற்றப்பட்ட இரணை இலுப்பைக் குளம் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஏனைய ஐந்தும் எவ்வேளையிலும் எடுத்துச் செல்லப்படும் சூழ்நிலை தோன்றியுள்ளதாக சில வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். குடாநாட்டுத் தேவைக்கென முதலில் 48 புதிய பஸ்கள் ஒதுக்கப்பட்டிருந்த போதும் பின்னர் அதில் 8 பஸ்கள் மன்னாருக்கும், வவுனியாவிற்கும் அனுப்பப்பட்டன. மிகுதி 40 பஸ்களும் யாழ்ப்பாணம் அனுப்புவதற்காகக் கொழும்பிற்குக் கொண்டு வரப்பட்டன. இதில் 30 பஸ்கள் 'லங்கா முடித்த' கப்பலில் அங்கு அனுப்பப்பட்டன. அதே நேரம் ஏனைய 10 பஸ்களும் அங்கு அனுப்பப்படுவதற்காகக் கொழும்பில் நிறுத்தப்பட்டிருந்தன.

எனினும் இவற்றில் ஐந்தைப் பாதுகாப்பு அமைச்சு வவுனியாவிற்கு அனுப்பியுள்ளதுடன் ஏனைய ஐந்தையும் வேறிடங்களுக்கு அனுப்பத் திட்டமிட்டிருப்பதாகத தெரிவிக்கப்படுகிறது. குடாநாட்டில் பஸ்களே இல்லை என்ற நிலையில் பலத்த முயற்சிகளின் பின் இவற்றைப் போக்குவரத்து அமைச்சு வழங்கி அதற்கேற்ப அங்கு ஆளணிகள் தெரிவு செய்யப்பட்டு புதிய பாதைகளில் பஸ் சேவைகள் நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்த வேளையில் ஏனைய டிப்போக்களிலிருந்து அல்லது புதிதாக பஸ்களைப் பெற்றுக்கொள்வதை விடுத்து குடாநாட்டிற்கு அனுப்புவதற்காக நிறுத்தப்பட்டிருந்த பஸ்கள் பாதுகாப்பு அமைச்சால் சுவீகரிக்கப்பட்டமை அப்பகுதி மக்களின் அத்தியாவசிய தேவைகளை உதாசீனம் செய்யும் ஒரு நடவடிக்கை எனவும் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விசேட அடையாள அட்டை விண்ணப்பப் படிவம் தட்டுப்பாடு

வலி வடக்கு, மார்ச் 22

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் விசேட அடையாள அட்டை விண்ணப்பப் படிவங்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

யாழ். செயலகத்திலும் விசேட அடையாள அட்டை விண்ணப்பங்கள் முடிவடைந்துள்ளன.

இதே நேரம் அடுத்த மாத நடுப்பகுதியுடன் விசேட அடையாள அட்டை விநியோகம் மட்டுப்படுத்தப்படவுள்ளதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டைக்கான விண்ணப்பப் படிவங்களுக்கு ஏற்கனவே தட்டுப்பாடு நிலவி வருவது தெரிந்ததே.

இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ-86)

## பளைக்கு மினி பஸ் சேவை

தென்மராட்சி, மார்ச் 22

தென்மராட்சி தனியார் போக்குவரத்துக் கழகத்தினால் யாழ்ப்பாணத்திலிருந்து பளை வரையிலான தனியார் பஸ் சேவைகள் கடந்த திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காலை 9.00 மணிக்கும் 11.00 மணிக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் மினிபஸ்கள் பளை சென்றடைந்து பகல் 12.45 மணிக்கும் 2.45 மணிக்கும் யாழ்ப்பாணத்திற்குப் புறப்படுமென கழகத் தலைவர் எம். அற்புதராசா தெரிவித்தார்.

அடுத்த மாதம் முதல் மேலும் சில மினிபஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுமெனவும் தெரிவித்தார்.

(ஐ -171)

## விநியோகம்

அச்சுவேலி, மார்ச் 22

விவசாய சம்மேளனம் ஊடாக மரமுந்திரிகைக் கன்றும், கொரடித் தோடையும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

அச்சுவேலி தெற்கு விவசாய சம்மேளனம் இதனை வழங்கி வருகிறது.

(ஐ-11)

## நுளம்புப் பெருக்கம்

நெல்லியடி, மார்ச் 22

துன்னாலை, வல்லிபுரக்குறிச்சி குடவத்தைப் பகுதிகளில் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துக்காணப்படுகின்றது.

துன்னாலைப்பகுதியிலுள்ள வீடமைப்புத்திட்டத்தில் அமைக்கப்பட்ட மலசலகூடக் குழிகள் திறந்த நிலையில் இருப்பதாலேயே இப்பகுதியைச் சூழவுள்ள இடங்களில் நுளம்புகள் பெருகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-109)

# கண்காணிப்பாளர் வெளியேற்றம் கொசோவோவில் கடும் சண்டை

பிறிஸ்ரினா, மார்ச் 22

கொசோவோவில் சேர்பியப் படைகள் புதிய இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளன. இதனால் 4 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர் என ஐ. நா. அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தலைநகர் பிறிஸ்ரினாவுக்கு வடக்கே உள்ள இரண்டு கிராமங்கள் மீது சேர்பியப் படைகள் பீரங்கிகள் சகிதம் தாக்குதலை மேற்கொண்டுள்ளன.

அல்பேனிய கிளர்ச்சிவாதிகளுக்கும், சேர்பியப் பிரதிநிதிகளுக்கும் இடையில் பாரிஸில் நடைபெற்ற இரண்டாம் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததை அடுத்து நேற்று முன்தினம் முதல் சர்வதேச கண்காணிப்பாளர்கள் கொசோ

**உலக அரங்கில்**

வோவை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

இந்த நிலையிலேயே சேர்பியப் படைகள் தமது புதிய படை நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளன.

இதேவேளை — சர்வதேச கண்காணிப்பாளர்கள் அயல்நாடான மசிடோனியாவில் இருந்து கொசோவோ நிலைவரங்களை கண்காணிப்பார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## ஏவுகணைத் தாக்குதலில் சதாம் தப்பினாரா?

லண்டன், மார்ச் 22

அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலில் இருந்து அதிபர் சதாம் ஹுசேய்ன் தப்பியுள்ளார் என லண்டனில் இருந்து வெளியாகும் ஈராக்கிய பத்திரிகையான அல்சமான் செய்தி வெளியிட்டுள்ளது.

'பாலைவன நரி' நடவடிக்கையின் போது அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் விமானக் குண்டுத் தாக்குதலில் சேதமடைந்த மாளிகையினைப் பார்வையிடச் சென்றவேளை அமெரிக்க ஜெற் விமானங்களின் ஏவுகணை இப் பகுதியில் வீழ்ந்து வெடித்தன என்றும்—

எனினும் சதாமுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை என்றும் அப்பத்திரிகை மேலும்தெரிவிக்கின்றது.

கடந்த 5 ஆம் திகதியே இச்சம்பவம் இடம்பெற்றது. இந்த மாளிகை பக்தாத்தில் உள்ள மிகப் பெரிய ஜனாதிபதி மாளிகைகளில் ஒன்றாகும். இங்கு சுரங்க மறைவிடங்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-க)

## மழை வேண்டி தவளைகளுக்கு திருமணம்

புதுடில்லி, மார்ச் 22

இந்தியாவின் வரட்சியால் பாதிக்கப்பட்ட வடகிழக்கு நகரான குவாஹாத்தியில் மழை வேண்டி இரு தவளைகளுக்கு திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. இந்த விநோதமான திருமண வைபவத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். அப்பகுதியில் இதனால் போக்குவரத்தும் தடைப்பட்டது.

இத் தகவலை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

வரட்சி நிலவும் வேளையில் இரு தவளைகளுக்கு ஆடம்பரமாக திருமணம் நடத்தி வைத்தால் 'மழைக்கடவுள்' மகிழ்ச்சி அடைந்து மழையை பொழியச் செய்வார் என இப் பகுதி மக்கள் நம்பி வருகின்றனர். (இ-10)

### முறைகேடான பாலியல் உறவு

## அமெ. படைத்தளபதி மன்னிப்புக் கோருகிறார்

போர்ட்லிவிஸ், மார்ச் 22

அமெரிக்க இராணுவச் சட்டங்களை மீறி தன்கீழ் பணிபுரியும்அதிகாரிகளின் மனைவியருடன் முறைகேடான உறவுகளை வைத்திருந்த குற்றத்திற்காக ஒப்வுபெற்ற அமெரிக்க இராணுவ ஜெனரல் ஒருவர் மன்னிப்புக் கேட்டுள்ளார்.

ஐம்பத்து மூன்று வயதான மேஜர் ஜெனரல் டேவிட் ஹோல், துருக்கியில் நிலைகொண்டுள்ள நேட்டோப் படைகளின் இரண்டாவது கட்டளை அதிகாரியாகப் பதவி வகித்த வேளை தனது கீழ்நிலை அதிகாரிகளின் மனைவிமாரை வற்புறுத்தி முறைகேடான உறவுகளில்ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தார். (ஐ—10)

## ஹொங்கொங்கில் வயக்ரா

ஹொங்கொங் நாட்டில் செக்ஸ் மாத்திரை வயகரா அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால் விற்பனை சூடுபிடிக்கவில்லை. ஏனெனில் அங்கு இதைவிட ஏற்கனவே உள்ள சீன மருந்துகளுக்குத் தான் கிராக்கி அதிகம் என்று கூறப்படுகின்றது. (இ)

## 3 லட்சம் பன்றிகள் மலேசியாவில் ஒழிப்பு!

கோலாலம்பூர், மார்ச் 22

நாட்டில் உள்ள 3 லட்சத்துக்கு மேற்பட்ட பன்றிகளைச் சுட்டுக் கொல்லும் பணியை மலேசிய இராணுவம் ஆரம்பித்துள்ளது.

பன்றிகளில் இருந்து பரவும் ஒருவகை வைரஸ் கிருமிகளால் ஏற்பட்ட தொற்றுநோய்க்கு இலக்காகி 50 -க்கும் மேற்பட்டோர் பலியானதை அடுத்தே பன்றி ஒழிப்பு நடவடிக்கையை இராணுவம் ஆரம்பித்துள்ளது.

தென் மேற்கு செம்பிலான் மாநிலத்திலுள்ள மூன்று கிராமங்களில் அடுத்துவரும் 10 நாள்களுக்குள் நாளாந்தம் 35 ஆயிரம் என்ற அடிப்படையில் பன்றிகள் சுட்டழிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இம் மாநிலத்திலேயே இந் நோயினால் பலர் இறந்துள்ளனர்.

முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மலேசியாவில் முஸ்லிம்கள் அல்லாத ஆயிரக் கணக்கான இராணுவத்தினரே பன்றி ஒழிப்புப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஐ—10)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஆதர் செல்வநாயகம்போல்
[ உப அதிபர் ]
அவர்களின்

# ஈராண்டு நினைவு நாள்

அழைத்த தேவன் உண்மையுள்ளவர் [1 கொரி 1:9 ]
God is trustworthy whom you called)



அன்னையிடத்தில்
1951 — 11 — 08

● ● ●

கர்த்தரிடத்தில்
1997 — 03 — 22

வாழ்க்கை ஒரு நீண்ட பயணம்
பய ணத்தில்மேடு, பள்ளம், வெற்றி, தோல்வி,
மகிழ்ச்சி, துக்கம் இவைகளை ஏற்று
மன வலிமையோடு வாழும் போது
நீண்ட பயணம்குறும் பயணமாக மாறிவிடுகின்றது.
உனது தேவை, சேவையே என்று அன் புடனும்,
காருண்யத்துடனும் சேவை செய்த உமது உள்ளம்
உன்னதமடையப் பிரார்த்திக்கின்றோம்.

சகோதரர்கள், மைத்துனிமார்கள்,
பெறாமகள்.

மாகியம்பதி,
சண்டிலிப்பாய். [64050]

---

## புலமைப்பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பம்

இவ் வருடம் நடைபெற உள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்களுக்கு மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வலிகாமம் கல்வி வலய பாடசாலை அதிபர்கள் விண்ணப்பப் படிவங்களை உடன் பூர்த்தி செய்து 25 ஆம் திகதி வியாழக்கிழமைக்குள் ஒப்படைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-152)

## கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ். கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும்ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள கால் நடை வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது. (ஐ-க)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 22

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்எதிர்வரும்28 ஆம் திகதி ஞாயிறுக்கிழமை காலை 9 30 மணிக்கு அதிபர் பொ. சுந்தரலிங்கம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (க)

## ஓவியருக்கு கௌரவம்

நல்லூர் சனசமூக நிலையத்தினர் ஓவியர் கலாபூஷணம் பெ. சுப்பிரமணியம் (மணியம்) அவர்களுக்கு பொற்கிழி வழங்கிக் கௌரவித்தனர்.

கடந்த 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்திலேயே அவர் கௌரவிக்கப்பட்டார்.

நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் ஆங்கில, சமய வகுப்புக்களில் பயின்று சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கும் அன்றைய தினம் பரிசுகள் வழங்கப்பட்டன. (ஐ-6)

---

## இதயபூர்வ வாழ்த்துக்கள்

கோண்டாவில் வடக்கு
**புலவர் வீடியோ**

வீடியோவில் முதன் முதலாக மிக்சிங் முறையை அறிமுகப்படுத்திய நிறுவனம் தலைவனை இழந்து நின்றாலும் தந்தை பெயர் காப்பாற்ற அவரது அருந்தவப் புதல்வர்கள் தொடர்ந்தும் வீடியோவில் பல புதுமைகள் செய்து வருகின்றார்கள்!


தந்தைபோன்று இவர்களும் அன்றும் இன்றும் என்றும் வீடியோவில் முன்னணியில் திகழ எமது இதய பூர்வ வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**வீடியோ கலாமினி**
அச்சுவேலி

(63903)

---

## ஐந்தாம் ஆண்டு நினைவு



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 12 | 01 |
| — | — |
| 10 | 04 |
| — | — |
| 1936 | 1994 |

அமரர்
## முத்துசாமி இராசரத்தினம்

திதி: 22 — 03 — 1999

பங்குனித் திங்கள் அன்று எல்லா மலர்களும் மலர்ந்தன; ஒரு மலர் மட்டும் மடிந்துவிட்டது ஐயா! என்றும் மடியாத நினைவுகளுடன்!

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'இராசரத்தினம் அன்பகம்'
சிறுப்பிட்டி மத்தி,
நீர்வேலி. (63708)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 14 | 02 |
| — | — |
| 03 | 02 |
| — | — |
| 1919 | 1999 |

திருமதி
## கார்த்திகேசு சின்னத்தங்கம்
( புங்குடுதீவு - 3 )

திங்கள் ஒன்று சென்றதம்மா
நிலவில்லை எங்கவலை
திக்குத்திசை எங்ஙனுமே
தேடுகின்றோம் காணவில்லை
போனதிசை தெரிந்திருந்தால்
போன்பண்ணிக் கதைத்திருப்போம்
பொல்லாத காலனவன்
பறித்து விட்டான் உன் உயிரை
பரமனின் பாதத்தில்
பூங்கொத்தாய் நீ விழுந்து
பாரினிலே எம்மவர்க்கு
பரிசனைத்தும் வேண்டிடுவீர்.

எம் அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி, தந்தி, கடித மூலம் அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும் நன்றி தெரிவிப்பதோடு இன்று (22-03-1999) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மருமகன், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

தகவல்:
S.K. சண்முகலிங்கம்,
132/3, பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம். [84024]

---

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைசுற்று, அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்,
121, 2 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்
தொலைபேசி எண்: 2459
(63579)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## வைரமுத்து நடராசா
( நாயன்மார்கட்டு )

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 24 - 03 - 1927 | 02 - 04 - 1998 |

எங்கள் உள்ளங்களில் என்றும் ஒளிவீசி
நிலையாக நிலைத்து நிற்கும் அன்புத் தெய்வமே!
எம்மை விட்டுப் பிரிந்தாலும்
நீங்கள் எம்முடன் இருக்கின்றீர்கள்!
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை
என்றும் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவால் வாழும்
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

77/1 செம்மணி வீதி,
புண்ணியர் மடம்,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (64032)

---


※ மாறிவரும் உலகையும் ※ தேவையான கல்வியையும்
விவரிக்கும் பிரசுரம்
'சாமிஜி' எழுதிய
**இருபத்தியோராம் நூற்றாண்டு சவால்களைச் சந்திக்க**
விலை ரூபா 15/-
**பரணன் அசோசியேட்ஸ்**
138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். (64053)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுழிபுரம் பெரியபுலோ கிராமத்தில் மக்களின் சுகாதார நிலை ஆய்வு

மூளாய், மார்ச் 22

சுழிபுரம் பெரியபுலோப் பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய மருத்துவ, சுகாதார நடவடிக்கைகள் ஆய்வுகளின் மூலம் இனம் காணப்பட்டுள்ளன.

மேற்படி பகுதிகளில் வாழும் குடும்பங்களைக் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக ஆய்வுக்குட்படுத்திய பின்னர் இப் பகுதிகளில் காணப்படும் மருத்துவ சுகாதார குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

சுகாதாரத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் இப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று களநிலையில் பல்வேறு படிநிலைகளில் இந்த ஆய்வு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

மேலும் இப்பகுதிகளைச் சேர்ந்த தொண்டர் குழுக்களுக்கு சுகாதாரக் கல்வி தொடர்பான பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மத்தியில் குடல் சம்பந்தப்பட்ட நோய்கள் அதிக அளவில் அவதானிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி கிராமம் இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

மலகூட வசதியின்மை, குடிநீர்ப் பிரச்சினை மற்றும் மருத்துவ சுகாதார அறிவின்மை, போசாக்கின்மை போன்ற பல்வேறு காரணிகளால் இப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக செயற்றிட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இவற்றைச் செயற்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ-99)

## சண்டிலிப்பாய் இந்து பெயர் மாற்ற விழா

சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயம், சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இப் பெயர்மாற்ற உத்தி. யோக பூர்வ விழா ஒன்றினை நாளை செவ்வாய்க் கிழமை காலை பத்து மணிக்கு கொண்டாட ஏற்பாடாகியுள்ளது.

அதிபர் ச. சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெற உள்ள இந்த விழாவில் முதன்மை விருந்தினராக வடக்கு— கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் க. கந்தசாமி கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா, தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன், வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் சு. கணபதிப்பிள்ளை, திருமதி றெ. இருதயநாதன், உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன், முன்னாள் அதிபர் சோ. சோமசேகரம் ஆகியோர் கலந்துகொள்வர். (ஐ-152-86-135-90)

## தவக்கால நாடகம்

அரியாலை, மார்ச் 22

யாழ். திருமறைக் கலாமன்றம் நடத்தும் "குருதி குவலயம்" என்னும் தவக்கால நாடகம் எதிர்வரும் 26 ஆம், 27 ஆம், 28 ஆம் திகதிகளில் மன்றக் கலையரங்கில் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 8.30 மணி வரை இடம் பெறும். (ஐ-17)

## சமய தீட்சை

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமைகள் தோறும் காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரை சமய தீட்சை நடைபெற்று வருகிறது.

ஆதீனகுரு மகாசந்நிதானம் ஸ்ரீ ல ஸ்ரீ சோமசுந்தரஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் சமய தீட்சையை வழங்கி வருகிறார். (ஐ-30)

## பிரிவுபசார விழா

தென்மராட்சி, மார்ச் 22

சாவகச்சேரி கச்சாய் வீதி சக்தியம்மன் தமிழ் வித்தியாலய அதிபராக கடமையாற்றி இளைப்பாறிய திருமதி இராசம்மா சபாரத்தினத்தின் பிரிவுபசார விழா அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திருமதி சிவபூசணம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது.

பாடசாலை அபிவிருத்திச் சபை, பெற்றோர் ஆசிரியர் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றால் ஒழுங்கு செய்யப்பட்ட பிரிவுபசார விழாவில் தென்மராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான இ. கனேசன், இ. கைலைநாதன், கல்வி ஆலோசகர் திருமதி ப. சுந்தரலிங்கம், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் சு. சுந்தரேசன் மற்றும் பெற்றோர்களும், மாணவர்களும் கலந்து கொண்டனர். (ஐ-117)

## கலந்துரையாடல்

புன்னாலைக்கட்டுவன், மார்ச் 22

வலிகாமம் தெற்கு சனசமூக நிலைய சமாசத் தெரிவு தொடர்பான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க் கிழமை மாலை 3 மணிக்கு வலிகாமம் தெற்கு பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து சமாசப் பிரதிநிதிகளையும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு வலிகாமம் தெற்கு சனசமூக அபிவிருத்தி அலுவலர் செல்வி இ. சிவயோகம் கேட்டுள்ளார். (க-1 22)

---

### செம்மணி இந்துமயான அபிவிருத்திச் சபையின் 5 ஆம் வருடாந்த பொதுக் கூட்ட அறிவித்தல் - 1999

மேற்படி சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் சித்திரை மாதம் (04 - 04 - 1999) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.

சகல ஆயுட்கால உறுப்பினர்களையும் தவறாது சமுகம் தந்து நடப்பாண்டு உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்ய உதவுவதுடன், மயான அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கும்படி கோருகிறோம்.

கு. கயிலாயபதி, (ஸ்தாபக உறுப்பினர்) தலைவர்.

லயன் வ. பரமசிவம், (ஸ்தாபக உறுப்பினர்.) கௌரவ செயலாளர்.

(64041)

---

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05 — 02 — 1920

மறைவு 14 — 03 — 1997

**திருமதி சிவசுப்பிரமணியம் செங்கமலம்**

திதி: 22 - 03 - 1999

அன்பைச் சொரிந்தே அல்லும் பகலும்<br>
அயராது பாடு பட்டு ஒற்றைப் பனைமரம்<br>
என்றாகி இன்னல் பல சுமந்து கண்<br>
துஞ்சாது கருத்துடனே எமை ஆளாக்கினாய்<br>
இங்கிதமாய் இறை வழியில் வாழ்ந்திருந்தாய்<br>
ஏழ்பிறப்பிலும் எங்கள் தாய் நீயாக வேண்டும்<br>
தினந் தினம் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

**மகன், மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள், உற்றார், உறவினர்.**

224/6, பிறவுண் வீதி,<br>
யாழ்ப்பாணம்.

(64035)

---

### வீடு விற்பனைக்கு

இல. 193/3, அரசடி றோட், கந்தர்மடம் (இந்து மகளிர் கல்லூரிக்கு அருகில்) முகவரியில் இருக்கும் சகலவித வசதிகளுடன் கூடிய மேல் வீடு உடன் இருக்கக் கூடியது விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளும் முகவரி:

160, நவீன சந்தை உட்புறம்.<br>
யாழ்ப்பாணம்.

(64063)

---

ஆலய உற்சவங்களை சிறப்பிக்கவும், புராண, இதிகாச வரலாறுகளான வள்ளி திருமணம், கண்ணப்பநாயனார், காரைக்கால் அம்மையார், பார்வதி கல்யாணம், சத்தியவான் சாவித்திரி போன்றவற்றை இசையோடு கேட்டு இன்புற அழைத்திடுங்கள்

### கற்பகவிநாயகர் வில்லிசைக்குழுவினர்

(நாதன் வில்லிசைக் குழு)

தொடர்பு:

திரு. பு. ஸ்ரீகாந்தன்<br>
டச்சு வீதி,<br>
வட்டு வடக்கு,<br>
சித்தன்கேணி.

திரு. மு. சடாச்சரம்<br>
இல. 171, அரசடி வீதி,<br>
கந்தர்மடம்,<br>
யாழ்ப்பாணம்.

(64019)

---

### தம்பனை மாரி அம்மன் கோயில்

அம்பிகை அடியார்களே!

மேற்படி ஆலயத்தின் கட்டட திருப்பணி நடைபெறுகிறது. ஆக்கமும் ஊக்கமும் அளித்து திருப்பணியில் பங்களிக்க விரும்புவோர் நேரடியாக ஆலயத்துடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகிறீர்கள் தனிப்பட்ட முறையில் ஆலயத்தின் பெயரால் நிதி சேகரிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பராமரிப்பாளர்<br>
சி. ஸ்ரீதரன்

நவாலி தெற்கு,<br>
மானிப்பாய்.

(63888)

---

### வாழ்த்துகின்றோம்

இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனத்தில் (ATI — யாழ்ப்பாணம்) கணக்கியல் உதவி விரிவுரையாளராகப் பதவி உயர்வு பெற்றுச் செல்லும்

எமது கணக்கியல் ஆசிரியர்

**திரு. வ. செந்தில்ராஜா**


அவர்களை வாழ்த்துகின்றோம்

வர்த்தக மாணவர் மன்றம்<br>
யா/கனகரத்தினம்<br>
மத்திய மகா வித்தியாலயம்

(64052)

---

### 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14 — 09 — 1972

மறைவு 22 — 03 — 1996

செல்வன்

**சிவசம்பு சிவனேசன்**

ஆறாத் துயரில் எமை ஆழ்த்திவிட்டு மீளாத்<br>
துயில் கொள்ளும் எம் அன்புச் செல்வமே!<br>
ஆண்டு மூன்றென்ன மூவாயிரம் ஆனாலும்<br>
ஆறாது எமதுள்ளம்.

உன் பிரிவால் துயருறும்

**அம்மா, அப்பா, அண்ணாமார், அக்காமார், தம்பிமார், தங்கை, அண்ணி, அத்தான்மார், மக்கள், மருமக்கள்,**

219, ஆஸ்பத்திரி வீதி,<br>
யாழ்ப்பாணம்.

(64016)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன்

## அபிவிருத்தி சுத்து மாத்து

போர் நிறுத்தப்படாத வரை அபிவிருத்தி வேலைகளால் பயனில்லை. சமாதானம், ஐக்கியம் என்பன நாட்டில் மலரும் வரை வெறும் வேலைத் திட்டங்களால் அபிவிருத்தி கண்டுவிடமுடியாது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் மட்டக்களப்பு மாவட்டப் பிரதம இணைப்பாளர் அப்பகுதி மாவட்ட வைத்தியசாலை ஒன்றுக்கு வைத்திய உபகரணங்களைக் கையளிக்கும் நிகழ்வில் பேசுகையிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

வடக்கு — கிழக்கில் நடத்திவரும் போரை நிறுத்துவதில் அரசு அக்கறை கொள்வதாக இல்லை. அடுத்த மாத முற்பகுதியில் தென்னிலங்கையில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு வன்னிப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன

ஆளும் கட்சி தனது அரசியல் லாபங்களைக் கருதியே போரைத் தொடருகிறது. ஆனால் அதற்கு நேர்மாறாக, சமாதான வழியில் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதிலேயே தனக்கு அக்கறை உண்டு என்று உலக நாடுகளை மிகக் கெட்டித்தனமாக நம்பவும் வைத்துள்ளது.

இங்கு நிலவும் பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக ஈழத் தமிழர்கள் புலம் பெயர்ந்து — தஞ்சம் புகுந்து — ஐரோப்பிய, ஸ்கன்டிநேவியன் நாடுகளில் அகதிகளாக வாழ்கிறார்கள்.

வடக்கு—கிழக்கின் அபிவிருத்திக்கு நிதி உதவி செய்துநிலைமைஇங்கு சுமுகமடைந்து விட்டது என்று கூறி ஈழத்தமிழரை திருப்பி அனுப்புவதற்கு அந்த நாடுகளில் பலவும் காத்திருக்கின்றன.

இலங்கை அரசாங்கம் இதனைத் தனக்கு ஒரு வாய்ப்பாகக் கொண்டு அந்த நாடுகளிடம் அபிவிருத்தி வேலைகளுக்கென நிதி உதவியைப் பெறுகிறது, அந்த நிதியில் சொற்பத்தைமட்டும்வடக்கு-கிழக்கில் அபிவிருத்தி வேலைகளுக்கென ஒதுக்குகிறது.

போர் நடைபெறும் பூமியில் பெரிய அளவிலான அபிவிருத்தி வேலைகள் உரியபலனைத்தரமாட்டா இராணுவத் தாக்குதல்களால் அகலாத அழிவுகள் ஒரு புறத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்க, மறுபுறத்தில்பெரிய அபிவிருத்தி வேலைகள் என்பது பயனற்றவை நிதியை வீணாக செலவு செய்வதும் ஆகும்.

மக்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றவல்ல திட்டங்களே இப்போதைய தேவைகள்.

உணவு, வைத்தியம், தங்குமிட வசதிகள், அவசர போக்குவரத்துப் போன்ற உடனடித்தேவைகளைப் பூர்த்தி செய்யாது, அபிவிருத்தி வேலைகளில் நாட்டம்கொள்வது ''சுத்து மாத்து'' நோக்கமுடையது என்பதில்சந்தேகம்என்ன?

அபிவிருத்திப் பணிகளைச் செய்வதற்கு முன்னர் போரை நிறுத்த வேண்டும் அதற்கே முழு அளவில் முன்னுரிமை தரப்படவேண்டும். மக்களுக்குப் பாதுகாப்பான நிம்மதியான வாழ்க்கை இல்லாமல் கட்டிப் போட்டு விட்டு அபிவிருத்தி என்று உளறுவது வெறும் வேடிக்கையே!

கூ. சங்கங்களில்

## ரவை மா விலையில் மாற்றம் எதுவுமில்லை

உரியாலை, மார்ச் 22

யாழ். செயலகத்தில் இருந்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவு செய்த ரவைமா சங்கங்களில் இருப்பு முடியும் வரை பாவனையாளர்களுக்கு கிலோ 25 ரூபா விலையிலேயே விநியோகிக்கப்படும்.

இவ்வாறு மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

சமாசம் கப்பல் மூலம் தருவித்த ரவைமா கிலோ 37 ரூபாவாக சங்கங்கள் மூலம் பாவனையாளர்களுக்கு வழங்குவதற்கு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் செயலகத்தினால் வழங்கப்பட்ட ரவை இருப்பு முடியும் வரை கிலோ 25 ரூபா விலையிலேயே வழங்கப்படும் என்றும் இதில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் சமாசத் தலைவர் மேலும் தெரிவித்தார். (ஐ-17)

## உதைபந்தாட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22

டாக்டர் ஜே. பி. சி. பிலிப்ஸ் ஞாபகார்த்தமாக யாழ். உதைபந்தாட்ட லீக் நடத்தும்உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் சென். அன்ரனீஸ் மைதானத்தில் ஆரம்பமாக இருந்த இரண்டாவது சுற்றுப் போட்டிகள் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக உதைபந்தாட்ட லீக் அறிவித்துள்ளது.

இந்தப் போட்டி எதிர்வரும் வியாழக்கிழமை முதல் யாழ். துரையப்பா ஸ்ரேடியத்தில் நடைபெறும்.

ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ 25. 03. 99 வியாழன்— யாழ். பல்கலைக்கழக அணி எதிர் சென். மைக்கேல் அணி.

★ 26. 03. 99 வெள்ளி— கிறீன்பீல்ட் எதிர் சென். மேரிஸ்

★ 27. 03. 99 சனி— சென் நீக்கலஸ் அணி எதிர் சென். அன்ரனீஸ்.

★ 28. 03. 99 ஞாயிறு பாடும் மீன் அணி எதிர் கலைவாணி.

தினமும் பிற்பகல் 4மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும். (ஐ)

## நாளை

பங்குனி 9

செவ்வாய்க்கிழமை

திதி: ஷஷ்டி நண்பகல் 11.52 வரை.

நட்சத்திரம்: ரோகிணி பிறபகல் 4 40 வரை.

சுபநேரம்: 10.47 12 17

ராகுகாலம்: 3 17 4.47

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## தவக்கால ஞான ஒடுக்கம்

யாழ்ப்பாணம, மார்ச் 22

யாழ். பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர்களுக்கான தவக்கால ஞான ஒழுக்கம், இன்று திங்கட்கிழமை, நாளை செவ்வாய்க்கிழமை நாளை மறுதினம் புதன்கிழமை ஆகியநாள்களில் பிற்பகல் 4.30 மணிமுதல் 6 மணி வரை நல்லாயன் ஆலயத்தில் நடைபெறும். (க)

## தவக்காலச் சிந்தனை-33

நல் மனங்கொண்டு சேவைக்கு முன்வருவோருக்கும், துன்பத்தில் உதவுவோருக்கும் நன்றி சொல்வதும் பாராட்டுவதும் முன்னைய காலத்தில் வழக்கமாகி வந்தது. இன்று நன்றிக்கும், பாராட்டுக்கும் அர்த்தம் தேடி அலையும் காலம். ஏற்றுக் கொள்ளாமையும், உற்சாகப் படுத்த மனமில்லாமையும் மட்டுமல்ல அச் சந்தர்ப்பங்களைத் தம் சுயநலத்தைக் கொண்டு முதலைக்கண்ணீர் வடிப்போர் அன்றைய யூதாதஸைப் போல் முணுமுணுப்பதையும் எண்ணிப்பாருங்கள்.

''மரியா இளமிச்சை எனும் கலப்பற்ற விலையுயர்ந்த நறுமணத் தைலம் கொண்டு வந்து இயேசுவின் காலடியில் பூசி அதனைத் தன் கூந்தலால் துடைத்தாள். தைல நறுமணம் வீடெங்கும் கமழ்ந்தது 'இயேசுவின் சீடரில் ஒருவனும் அவரைக் காட்டிக் கொடுக்க இருந்தவனுமான யூதாஸ்காரியோத் இந்தத் தைலத்தை விற்று அப்பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கக் கூடாதா? என்று கேட்டான். ஏழையின்பால் கொண்டிருந்த அக்கறையினால் அல்ல, மாறாக அவன் ஒரு திருடனாய் இருந்ததால் அப்படிக் கேட்டான். இப்படி மனம் பேதலிக்கும் சந்தர்ப்பங்கள் எம் வாழ்க்கையில் எத்தனைமுறை தொனித்திருக்கும். நல்லதை ஏற்றுக்கொள்வதிலும்பாராட்டுவதிலும் தடைக்கற்களாய் இராது சிலுவையின் பயணத்தில் சீமோன்களாவோரை ஏற்றுப் பயணிப்போமா?

- யோசப் பாலா

### உதய வாக்கு

கேட்டவுடன் கொடுப்பது தெய்வத்திற்கு வழக்கமில்லை. பக்தி பக்குவம்அடைந்த பிறகுதான் கேட்டவரம் கிடைக்கும்

- மகாகவி பாரதியார்

## கண் தான தினம்

நெடுந்தீவு. மார்ச் 22

எதிர்வரும் 31ஆம் திகதி கண்தான தினம் ஆகும். இத்தினத்தை சகல சனசமூக நிலையங்களிலும் அனுஷ்டிக்குமாறு யாழ். மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் நீ. வி. கிருஷ்ணசாமி கேட்டுள்ளார்.

யாழ். மாவட்ட மக்கள் இறந்தோரின் கண்களைத் தானம் செய்யப் பின்னடிக்கிறார்கள். பார்வை வழங்கத்தக்க அரிய உடல் உறுப்பான கண்கள் சடலங்களுடன் புதைக்கப்பட்டும் எரிக்கப்பட்டும் வீணடிக்கப்படுவதால் எம் மத்தியில் பலர் பார்வையற்றவர்களாகத் தொடர்ந்து வாழ வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். எனவே கண்தானம் செய்வதில் மக்கள் அக்கறை கொள்ள வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ-111)

## வாசகர் திருமுகம்

### நாய்களுக்குத் தடுப்பூசி; கவனத்தில் கொள்க!

சில மாதங்களுக்கு முன்பு வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு ''நீர் வெறுப்பு நோய்' தடுப்பு ஊசி மருந்து யாழ்ப்பாணம், நல்லூர், கல்வியங்காடு, சங்கானைப் பகுதிகளில் ஏற்றப்பட்டது. உதயன் பத்திரிகையில் இதற்கான விவரங்கள் கொடுக்கப்பட்டன.

ஏனோ ஏனைய இடங்களில் இத் தடுப்பு மருந்து நாய்களுக்கு ஏற்றியதான தகவல்கள் எதுவும் இல்லை. மானிப்பாய்ப் பகுதியில் இருப்பவர்களும் இதனை இழந்துள்ளனர்.

கொளுத்தும் வெயில் காலப்பகுதி தொடங்கி விட்டதால் உடனடியாக இதனைக் கவனத்தில் எடுத்தால் எத்தனையோ மனித உயிர்களைக் காப்பாற்ற முடியும்.

ஆகவே மானிப்பாய்ப் பிரதேசத்தில் இந்த நோய்க்கான மருந்தை வளர்ப்பு நாய்களுக்கு ஏற்றி உதவ வேண்டுமென இப்பகுதி சுகாதாரப் பொறுப்பாளரை மிகவும் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கிறேன்.

கா. பூபாலபிள்ளை,

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

### 'சோஷல்' நடத்துவதற்காக எல்லோரிடமும் பணம் கறப்பதா?

பாடசாலைகளிலே மூத்த மாணவர்களுக்கு பிரிவுபசார வைபவம் என்ற போர்வையில் உயர்தர வகுப்பு மாணவர்கள் 'சோஷல்' (Social) கொண்டாடுவது பொதுவாக எல்லோருக்கும் தெரிந்த விடயமே.

இந்த விடயத்தில் அதிபர், ஆசிரியர்களும் முழுமூச்சாகச் செயற்படுகின்றார்கள்.

இன்றைய காலகட்டத்தில் வீணான ஆடம்பரச் 'சோஷலும்' 'ராகிங்கும்' அவசியம் தானா? குறிப்பாக சோஷலுக்கென ஒவ்வொரு மாணவர்களிடமிருந்தும் 250 ரூபா முதல் 300 ரூபா வரை பணம் தவறாது அறவிடப்படுகிறது. இவ்வளவு தொகைப் பணம் இன்றைய காலகட்டத்தில் எவ்வளவு பெரிதானது, பெறுமதியானது என்று அன்றாடம் உழைத்து உண்பவர்களுக்குத்தான் தெரியும். ஒரு கூலித் தொழிலாளி இரண்டு நாள்கள் கஷ்டப்பட்டு உழைத்தால் தான் இவ்வளவு பணத்தைச் சம்பாதிக்க முடிகிறது. ஆனால் இவ்வளவு தொகைப் பணத்தை ஓர் ஏழை மாணவனிடமோ அல்லது மாணவியிடமோ ஒரு நாள் ஆடம்பரத்திற்காக கட்டாயப் படுத்திக் கேட்பது நியாயமான செயலாகுமா?

பாடசாலையில் அனைத்து மாணவர்களும் சமம் என்பதற்காகவே எந்தவித பேதமுமின்றி ஒரே சீருடை அணிகிறார்கள். அனேகமான பாடசாலைகளில் மாணவர்களிடையே ஏழை, பணக்காரர் என்ற தாழ்வுமனப்பான்மையைத் தடுப்பதற்கு மாணவர்கள் நகைகள் அணியக் கூடாது என்றும் பணிக்கப்படுகிறார்கள்.

ஆனால் ''சோஷல்'' விடயத்தில் பாடசாலை நிர்வாகத்தினரும் பங்குபற்றுவதனால் அதற்கு கட்டுப்பாடுகள் போடாது மௌனம் சாதிக்கிறார்கள். அதற்காக ''சோஷலை'' நிறுத்த வேண்டுமென்பதில்லை. பண உதவி செய்யக்கூடியவர்களிடம் மட்டும் பணத்தைப் பெற்று அதனைச் செய்யலாம். வறுமையால் வாடுகின்ற மாணவர்களிடம் பங்குபற்றாவிட்டாலும் பணம் செலுத்தியாக வேண்டும் என்னும்போது அவர்களது மனம் எவ்வளவு சஞ்சலப்படுகிறது என்பது பிறருக்குத் தெரிவதில்லை. அவ்வாறு வற்புறுத்திப் பணம் பறிப்பது நியாயமான செயலாகுமா? மற்றும் பணம் செலுத்த முடியாத காரணத்தால் அந்நிகழ்வில் பங்களிக்காத மாணவர்கள் பிற மாணவர்களால் நையப்புடைக்கப்படுகின்ற நிலையும் ஏற்படுகின்றது

இவற்றை எல்லாம் கருத்திற்கொண்டு இனிமேலாவது ஏழை மாணவர்களின் நிலை கருதி வீணான கோலாகலங்களைப்பாடசாலைகளில் தவிர்க்கும் வகையில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகள் பார்த்துக் கொள்வார்களா?

சு. ப. கஜானன்
(பாதிப்புற்ற மாணவர் சார்பில்)

அச்சுவேலி.

யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

நல் வாழ்வைத் தாராய்

புண்ணியங்கள் செய்யாதிப் பூதலத்திற் பிறந்து
புரப்பவர்கள் புரியிடராற் புழுங்கி வாழ்வில்
எண்ணரிய துன்பத்தால் இகமீ தழுந்தும்
எந்தமது புன்மையை யகற்றி யருள்வாய்
நண்ணரிய வுன்பாதம் நாடுவார்க் கெந்நாளு
நல்லருளைப் பொழிவாலாம் பிகையோ டுறையும்
வண்ணைநகர் வைத்தீஸ் வரப்பெரு மானே
வழுத்திவரு மெமக்குநல் வாழ்வைத் தாராய்.

நாயன்மார்கட்டு
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

திருநாவுக்கரசு சுகுணராஜ் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல. 601341921V), விசேட அடையாள அட்டை ஆகியன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நியூசயன்ஸ் ஹோல் கன்னாதிட்டி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.

(64057)

சுப்பிரமணியம் சிவலிங்கம் எனும் பெயரையும் 632773510V என்ற இலக்கத்தையும் திருநகர் கிளிநொச்சி என்னும் விலாசத்தையும் கொண்ட தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மொடோன் ஸ்ரோர்ஸ், நெல்லியடி என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும்.

(சி/6847)

## யாழ்ப்பாணம்

உதயனில் சிறுகதை பற்றிய கட்டுரை வாசித்தீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1. நாடகம் எழுதுவது எப்படி? 2. யாழ்ப்பாணத்தில் அந்த 6 மாதங்கள். 3. யாழ்ப்பாணமா? கொழும்பா? ரூபா 50.

(64060]

## விற்பனைக்கு

4 S சம்பியன் (பஜாஜ்) மோட்டார்சைக்கிள் விற்பனைக்கு உண்டு. வெள்ளி, புதன் தவிர்ந்த ஏனைய நாள்களில் 4-30 மணிக்குப் பின் பார்வையிடலாம். தொடர்பு: K. சுபாசினி, 749, பலாலி றோட், திருநெல்வேலி, (திருநெல்வேலி சந்தி அருகில்)

(64051)

புதிய Benley CD 90 Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சனி, ஞாயிறு மாலை 2-5 வரை. சி. ஜெயராசசிங்கம், (தம்பி) விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(64059)

## அறிவிக்கவும்

எனது சொந்தப்பாவிப்பிலுள்ள சோனி ரி. வி. (KV 1461 GE - KV - 1440 AS MK - II) வீட்டில் இருந்து 16 - 03 - 99 களவாடப்பட்டுள்ளது. இதுபற்றித் தெரிந்தால் கீழ்க்காணும் முகவரியில் அறியத்தரவும். S. மைக்கல், இல. 19/6, அடப்பன் வீதி, யாழ்ப்பாணம்.

(64053)

## விண்ணப்பம்

அரச சேவையிலுள்ளவர்கள் இலங்கை நிர்வாக சேவையில் சேர்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விவரங்கள் மார்ச் 12 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

(ஐ - 5)

**JTC**

**கல்வி நிலையம்**
**யாழ்.**

**A/L கலை வகுப்புகள்**
நடைபெறுகின்றன.

★ தமிழ்
ஆர்த்திகன்
★ கிறிஸ்தவம்
வசந்தன்
★ அளவையியல்
எட்வின்

**6 — O/L வரையான வகுப்புகளும் நடைபெறுகின்றன.**

(64069)

# ஒரு வார காலத்தில் 529 பேர் வந்தனர்

யாழ்ப்பாணம், மார்ச் 22

வன்னியிலிருந்து யாழ். குடாக்கடல் ஊடாக 330 குடும்பங்களைச் சேர்ந்த 529 பேர் மார்ச் 1 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை குருநகர் நலன்புரி முகாமிற்கு வந்து சேர்ந்தனர்.

இவர்கள் விசாரணைகளின் பின்னர் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். (இ-5)

விஷ்ணு

**சிறந்த தெரிவுகள்! நிதான விலை!**

**மங்கள வைபவங்களுக்கேற்ற**

- கூறைச்சேலைகள்
- மணிப்புரி
- காஞ்சிபுரம்
- பட்டுவேட்டிகள்

**ஆடவர்களுக்கான**

சேட்டிங் சூட்டிங், றெடிமேட் ஆடைகள் மற்றும் சகல புடைவைத் தினிசுகளையும் கண்ணைப் பறிக்கும் வண்ணக் கலரில்

நிதானமான விலையில் சிறந்த தெரிவாகப் பெற்றுக் கொள்ள எங்களிடம் என்றும் வாருங்கள்

## சோதி றெக்ஸ்ரைல்ஸ்

14, நவீன சந்தை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சகல விதமான

சாறி பிளவுஸ்துணி வகைகள் தெரிவு செய்ய

17, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(மேல் மாடி)

(சி/6850)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

**பொன்னம்பலம் இராசதுரை**

(ஒய்வுபெற்ற இ. போ. ச உத்தியோகத்தர், கோண்டாவில் டிப்போ)

**அவர்கள்**

கனடாவில் மரணமடைந்ததையிட்டு அதிர்ச்சியும், கவலையுமடைகின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்

**திருமதி. சரஸ்வதி சபாரட்ணம்,**
**பாலசுப்பிரமணியம் குகராணி குடும்பம்,**
**யோகேஸ்வரன் இந்திராணி குடும்பம்,**
**சிவநேசன் நிர்மலராணி குடும்பம்,**
**முகுந்தன் துஸ்யந்தி குடும்பம்,**
**(உறவினர்கள்.)**

சீ. சிவநேசன்
"ஆனந்தவாசா"
3 ஆம் கட்டை, கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(64067)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 30 | | 01 |
| 11 |  | 04 |
| 1928 | | 1998 |

அமரர்

**கந்தையா இராசரத்தினம்**

[கொல்லன்கலட்டி]
(இளைப்பாறிய சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி)

**திதி: 22 - 03 - 99**

ஆண்டது ஒன்று ஓடித்தான் மறைந்தாலும்
உங்கள் நினைவு எங்கள் மனதைவிட்டு அகலவில்லை
எங்கள் வாழ்வினை உயர்விக்க உங்கள் ஆசி வேண்டி
இங்கு நாம் அஞ்சலி செலுத்துகின்றோம் இந்நாளில்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

16, கந்தையா வீதி,
சாவகச்சேரி.

(சி/6848)

# ஐரோப்பிய தூதருக்கு நெடுந்தீவில் வரவேற்பு

நெடுந்தீவு, மார்ச் 22

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்ட நெடுந்தீவு குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தைத் திறந்து வைப்பதற்காக கடந்த வியாழனன்று வருகைதந்த ஐரோப்பிய சமூக மனிதாபிமான முன்னேற்ற அமைப்பின் தூதுவர் இல்கா உசிற்றாலோவுக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் நெடுந்தீவில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

மு. ப. 11. 30 மணிக்கு நெடுந்தீவுத் துறைமுகத்தில் வந்திறங்கிய தூதுவருக்கும் ஏனைய அதிகாரிகளுக்கும் பிரதேச சபைத் தலைவர் அ. வெ. அரியநாயகம், பிரதேசச் செயலாளர் நா. இராமச்சந்திரன், பிரதேசசபை உபதலைவர் எஸ். மோகன் ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர். அவர்களைத் தொடர்ந்து ஏனைய அரச ஊழியர்கள் பொதுத்தாபனங்களின் பிரதிநிதிகள் உட்பட பொதுமக்களும் மலர் மாலைகள் சூட்டினார்கள்.

துறைமுகத்தில் இருந்து குதிரைகளின் அணி வகுப்புடன் மங்கள இசை முழங்க வீதியின் இருமருங்கிலும் பாடசாலை மாணவர்கள் அணி வகுத்து நின்று மலர்கள் தூவ பல. நோ. கூ. சங்கத் தலைமையகத்திற்கு ஊர்வலமாக வந்து சேர்ந்த தூதுவரையும் ஏனைய அதிகாரிகளையும் ப. நோ. கூ. சங்கத்தின் நுழை வாயிலில் வைத்து கூ. சங்கத் தலைவர் கோபாலசிங்கம் மற்றும் சங்கப் பணியாளர்கள் வரவேற்று தேநீர் விருந்துபசாரமளித்தனர்.

அதைத் தொடர்ந்து சாராப்பிட்டி குடிதண்ணீர் விநியோகத் திட்டத்திற்குச் சென்ற தூதுவரையும் ஏனையோரையும் மேற்குப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் பொதுமக்கள் வரவேற்றனர்.

வரவேற்பு நிகழ்வுகளையடுத்து நீரிறைக்கும் இயந்திரத்தை இயக்கியதுடன் பெயர்ப்பலகையையும் இல்கா உசிற்றாலோ திறந்து வைத்தார். (ஐ-111)

# ஆரம்பக்கல்வி கண்காட்சி

நெடுந்தீவு, மார்ச் 22

தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையிலான ஆரம்பக் கல்விக் கண்காட்சி எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் நடைபெறும்.

கண்காட்சியை வடக்குக் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் என். கந்தசாமி திறந்து வைப்பார்.

(ஐ - 111)

# மருந்தகத்தில் மருந்து தட்டுப்பாடு

அச்சுவேலி, மார்ச் 22

வலி. கிழக்கு பிரதேசசபை அச்சுவேலி உபஅலுவலகத்தில் செயற்பட்டுவரும் இலவசசித்த ஆயுர்வேத மருந்தகத்தில் முக்கியமான மருந்து வகைகள் இல்லாமையால் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர்.

சித்த ஆயுர்வேதத்தில் நம்பிக்கை கொண்ட பெருமளவு மக்கள் அச்சுவேலி பிரதேச சபை உபஅலுவலக இலவச சித்த ஆயுர்வேதமருந்தகத்தில் சிகிச்சை பெற்று வந்தபோதிலும் கடந்த சில வாரங்களாக அங்கு மருந்து பெற முடியாத நிலை உள்ளது.

மருந்தகத்திற்கு 1999 ஆம் ஆண்டுக்கான மருந்து வகைகள் இது வரை விநியோகிக்கப்படவில்லை என அறியப்படுகின்றது. (ஐ - 11)

உ

களையோடை

## கண்ணகி அம்மன் கோயில்

நவாலி

அம்பிகை அடியார்களே;

ஆலயத் திருப்பணி நடைபெற உள்ளது. திருப்பணியில் பங்குபெற விரும்புவோர் நேரடியாக ஆலய உரிமையாளருடன் தொடர்பு கொள்ளவும். தனிப்பட்ட எவரையும் நிதி சேகரிக்க நியமிக்கவில்லை என்று தெரிவித்துக் கொள்கின்றேன்;

உரிமையாளர்
**க. நாகேந்திரம்**

(63887)

நெடுந்தீவு மேற்கு

## நெழுவினி சித்திவிநாயகர் தேவஸ்தானம்

## மண்டலாபிஷேக பூர்த்தி விழா

ஐங்கரன் அடியார்களே !

நிகழும் வெகுதானிய வருடம் பங்குனி மாதம் 10 ஆம் திகதி [ **24—03—1999** ] புதன்கிழமை காலை 10 மணிக்கு 1008 சங்காபிஷேகமும், விசேட பூசையும், மகேஸ்வர பூசையும் மாலை 6 மணிக்கு விசேட பூசை, திருவூஞ்சல் நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி உலாவரும் அருங்காட்சி இடம் பெறும்.

சங்காபிஷேக பிரதமகுரு
**சிவஸ்ரீ வை. தியாகராஜா குருக்கள்** (ஊரெழு)

மங்கள இசை
**வடிவேலு செல்வராசா குழுவினர்** (கல்வியங்காடு)

**வருடாந்த உற்சவம்:**

| | | |
|---|---|---|
| 5 . 4 . 1999 | திங்கட்கிழமை | கொடியேற்றம் |
| 14 . 4 . 1999 | புதன்கிழமை | இரதோற்சவம் |
| 15 . 4 . 1999 | வியாழக்கிழமை | தீர்த்தோற்சவம் |

என்பனவும் இடம்பெறும்.

**ஆலய பரிபாலன சபை**

நெடுந்தீவு மேற்கு,
நெடுந்தீவு.

[ C/6849 ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர் உட்பட
# 275பேர் திருச்சியில் கைது!

## பாரதீய ஜனதாவின் மாநாட்டையொட்டி

சென்னை, மார்ச் 22

திருச்சியில் நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெற்ற பாரதீய ஜனதாக் கட்சியின் மாநில மாநாட்டையொட்டி இலங்கைத் தமிழர்கள் உட்பட 275 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாநாட்டில் பிரதமர் வாஜ்பாய், உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி உட்பட முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டனர். இதனாலேயே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

திருச்சியில் குறித்த காலப் பகுதியிலும் பார்க்க அதிக காலம் தங்கியிருந்த 3 இலங்கைத் தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களை விட தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக்கழகத்தின் உறுப்பினர்கள் தமிழ்நாடு விடுதலை இராணுவத்தின் ஆதரவாளர்கள் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெரும்புதூர் மாவட்டத்தில் கைதான இந்த ஆதரவாளர்கள் 125 பேரும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாநாட்டை முன்னிட்டு கடந்த ஒரு வாரகாலமாகவே திருச்சி நகரிலும் இதர பகுதியிலும் வீடு வீடாக தேடுதல்களும் சோதனைகளும் இடம்பெற்றன. வெளியார் எவரையும் அனுமதிக்க வேண்டாமென வீட்டுரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

வாகனங்களும் கடுமையான சோதனைக்குள்ளாக்கப்பட்டன. மதுரை திருநெல்வேலிப் பகுதியிலும் தீவிர சோதனை வேட்டை இடம்பெற்றது.

கடந்த ஒரு வருட காலமாக அடிப்படைவாத அமைப்புக்களின் நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதை கவனத்திற்கொண்டே பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

## வலயப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 22

தீவக கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் இன்றும், நாளையும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

நாளை நடைபெறும் இறுதி நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக தீவக வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் என். ஐ. தர்மலிங்கமும் கலந்து கொள்வர்.

தீவக வலய உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் எம். எஸ். ஏ. ஒஸ்வால்ட் இந்தப் போட்டிகளுக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

(இ-3-51-111)

★ ★ ★

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கான மெய்வன்மைப் போட்டிகள் மூன்று மட்டங்களில் நடைபெறவுள்ளன.

கரவெட்டிக்கோட்டப் பாடசாலைகளுக்கான மெய்வன்மைப் போட்டிகள் இன்றும் நாளையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் —

மருதங்கேணி கல்விக்கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி செம்பியன்பற்று அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மைதானத்திலும் —

பருத்தித்துறைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 29 ஆம் 30 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் — நடைபெறும்.

கரவெட்டி, மருதங்கேணி, பருத்தித்துறை ஆகிய கல்விக் கோட்டங்களில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெறுபவர்கள் வடமராட்சிக் கல்வி வலய மட்ட மெய்வன்மைப்போட்டிக்குத் தகுதி பெற்றவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். (இ-118)

★ ★ ★

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வந்த கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 2-00 மணிக்கு வட்டு. ஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் நடைபெறும்.

இந்த ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ 17 வயது — சண்டிலிப்பாய் இந்து ம. வி. எதிர் சங்கானை சிவப்பிரகாச ம. வி.

★ 19 வயது — சங்கானை சிவப்பிரகாச ம. வி. எதிர் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி. (இ-90-28)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

நீர்வேலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளை ஒட்டி வந்தவரான பொலிகண்டியைச் சேர்ந்த இராஜேந்திரம் வாசுதன் (வயது 20) என்ற இளைஞனே காயமடைந்தவராவார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-15)

## யோகர் சுவாமி திருவடிப் பூசை

நல்லூர் ஸ்ரீகந்தசாமி கோயில் முன் வீதியில் உள்ள தேரடி அறுபத்து மூவர்குரு பூசை மடத்தில் கொழும்புத்துறை யோகர் சுவாமி திருவடிப்பூசையை ஒட்டி இன்று காலை 9.30 மணிக்கு அபிஷேக ஆராதனைகள், நற்சிந்தனை, கூட்டு வழிபாடுகள் இடம்பெறும். (இ-30)


நேற்று முதல் நாள் நடைபெற்ற

( தரம் 2 — 8 )

மாதாந்தப் பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்களும் புலமைப் பரிசில் வினாத்தாள்களும் விடைகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.

BOND

(64074)


## சமய சந்நிதிகளில்

மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று திங்கள் முற்பகல் 11.00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

30 ஆம் திகதி செவ்வாய் காலை 10.00 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 11.00 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஐ-90)

★ ★ ★

நுணாவிற்குளம் கண்ணகையம்மன் கோயில் பங்குனி இரண்டாம் திங்கள் உற்சவம் இன்று திங்கட்கிழமை நடைபெறும். கைதடி — நுணாவில் மக்களால் நடத்தப்படும் இவ்வுற்சவத்தில் மகேஸ்வர பூஜையும் இடம்பெறும். (ஐ-27)

★ ★ ★

சரித்திரப் பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் தேவஸ்தான வருடாந்த பிரம்மோற்சவம் இம்மாதம் 29 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 18 நர்ள்களுக்கு நடைபெற உள்ளது.

விசேட உற்சவங்களாக ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு மஞ்சத் திருவிழாவும், 13 ஆம் திகதி மாலை சப்பறத் திருவிழாவும், 14 ஆம் திகதி பகல் 12 மணிக்கு இரதோற்சவமும், 15 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தீர்த்த உற்சவமும், மாலை 2.30 மணிக்கு துவஜாரோகணமும் (கொடி இறக்கம்) நடைபெறும்.

தினமும் மாலை உற்சவம் நிறைவுபெற்றதும், 'செஞ்சொற்செல்வர்' ஆறு. திருமுருகனின் மகா பாரத தொடர் சொற்பொழிவு நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

(ஐ-152-135-90)

★ ★ ★

தொல்புரம் 'கொட்டடியம்பதி' அருள்மிகு ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்பாள் கோயிலில் இன்று 2 ஆவது பங்குனித் திங்கட்கிழமை காலை விசேட பொங்கல், அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாடுகள் நடைபெறும்.

நெடுந்தீவு மேற்கு நெழுவினி சித்தி விநாயகர் தேவஸ்தான மண்டலாபிஷேகப் பூர்த்தி விழா எதிர்வரும் புதன்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகும்.

காலையில் ஆயிரத்தி எட்டு சங்காபிஷேகமும் நண்பகல் மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

மாலை 6 மணிக்கு விசேட பூசைகள், திருவூஞ்சல் என்பனவும் அதைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் திருவீதியுலாவும் இடம்பெறும்.

சிவஸ்ரீ வை. தியாகராஜக் குருக்கள் மண்டலாபிஷேக நிகழ்ச்சிகளை நடத்துவார். வடிவேலு செல்வராசா குழுவினரின் விசேட மங்கள இசை நிகழ்ச்சியும் இடம்பெறும். (ஐ-111)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீவல்லிபுரநாதர் தேவஸ்தானத்தில் மச்ச ஜெயந்தி உற்சவத்தை முன்னிட்டு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு விசேட அபிஷேக, பூசைகள் நடைபெறும்.

(இ-ரீ)

★ ★ ★

நெடுந்தீவு மார்ச் 22

புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் கோயில் வருடாந்த உற்சவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி பதினொரு தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(இ-111)

★ ★ ★

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் பொங்கல் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. விளக்கேற்று வைபவம் சென்ற செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது. தினமும் மாலை விசேட பூசை வழிபாடுகள், சமயச் சொற்பொழிவுகள், கூட்டுப் பிரார்த்தனைகள் நடைபெற்று வருகின்றன.

(இ-28)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பருத்தித்துறை, தும்பளை தெற்கு
திருவள்ளுவர் சனசமூக நிலையத்தலைவர்

திரு. சின்னத்தம்பியின்

அன்பு மனைவி

### அமரர் மங்கையர்க்கரசி சின்னத்தம்பி

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருவள்ளுவர் சனசமூக நிலையம்

தும்பளை தெற்கு,
பருத்தித்துறை.

(சி/6854)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில்: 29 — 05 — 1944

விண்ணில்: 20 — 02 — 1999

### திருமதி சின்னத்தம்பி மங்கையர்க்கரசி

எமது அணையாத தீபமாய் விளங்கும் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னார் இறைபதமடைந்த செய்தி கேட்டு எமது இல்லம் நாடி வந்து இறுதிக் கிரியைகளிலும் பின்னர் நடைபெற்ற அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர்களுக்கும் மற்றும் புலோலி ப. நோ. கூ. சங்கத்தவர்களுக்கும் தும்பளை தெற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையத்தினருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

"அரசி அகம்",
நவிண்டில், கரவெட்டி.

(சி/6855)

## முதலாண்டு நினைவஞ்சலி

### அமரர் குமாரவேலு செல்லையா

மலர்வு: 01.04.1918

உதிர்வு: 30.03.1998

திதி: பூர்வபட்ச சதுர்த்தி
21.03.1999

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, ஆயிரம் பிறை கண்டு, எம்மை அவையில் முந்தியிருககச் செய்த எங்கள் அன்பு அப்பாவே! நீங்கள் காட்டிய அறநெறிகளைக் கைக்கொண்டு என்றும் உங்கள் பெருமையை நிலைநிறுத்தி வாழ்வோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

தகவல்;
க. வி. கந்தவேள்,
வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(கனடா, நியூசிலாந்து, கொழும்பு)

(64070)

## நல்லூர் இ. த. பெ. பாடசாலை
(மங்கையர்க்கரசி வித்தியாலயம்)

### பழைய மாணவர் சங்கம்
### வருடாந்தப் பொதுக் கூட்டம்

இடம்:- பாடசாலை மண்டபம்
காலம்:- 31-03-99 புதன்கிழமை காலை 9.30 மணி
தலைமை:- திரு. க. நாகேந்திரம் [தலைவர்]

அனைத்துப் பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். இதுவரை உறுப்பினர்களாக சேர்ந்து கொள்ளாதவர்கள், செயலாளரிடம் தொடர்பு கொண்டு சேர்ந்து கொள்ளவும். பிரேரணைகள் முன்வைக்க விரும்புவோர் 25—03—99 க்கு முன்னர் செயலாளருக்கு அனுப்பிவைக்கவும்.

க. நாகேந்திரம்
தலைவர்

கி. செல்வராசா
செயலாளர்

ப. மா. ச. 18-03-1999

(64076)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பஸ்தரை காணவில்லை என முறையீடு

நெல்லியடி, மார்ச் 22

கரவெட்டி இராச கிராமத்தைச் சேர்ந்த நாகமுத்து தவராசா (34 வயது) என்பவரை கடந்த வெள்ளிக்கிழமை முதல் காணவில்லை என்று அவரது மனைவி தவராஜா தனலட்சுமி பருத்தித்துறை ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேசன் தொழில் செய்பவரான தமது கணவன் கடந்த வெள்ளிக்கிழமை மரண வீடு ஒன்றுக்குச் செல்வதாகக் கூறிச் சென்றார் என்றும்—

நேற்று வரை அவர் வீடு திரும்பவில்லை என்றும்— தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3-109)

### களுத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்)

அவருடன் சேர்ந்து அழகையா மகேந்திரன் என்பவரும் உண்ணாவிரதமிருந்து வருகிறார்.

படிப்படியாக மற்றும் பல கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் இணைவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)


எமது இன்றைய
CD வெளியீடு!
சரத்குமார் - ரோஜா
நடித்த
சின்னத்துரை
▼ பிரதிகளை இன்று 3 மணிக்குப் பின் பெற்றுக் கொள்ளலாம்.
கபூரி
வீடியோ விஷன்
பஸ் நிலையம்,
அச்சுவேலி.
(சி/6855)


## மன்னாரப் பகுதியில் இராணுவ நடவடிக்கை

மன்னார், மார்ச் 22

மன்னார் காட்டுப்பள்ளிக் கிராமத்தை நோக்கி படையினர் நேற்று இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டனர்.

இந்த நடவடிக்கையின்போது படையினர் கடற்கரைப் பக்கமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனால் ஏற்பட்ட சேத விவரம் தெரியவரவில்லை.

(இ-3)

### கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்)

களை வழங்க 18 கப்பல் நிறுவனங்கள் தமது கேள்விகளைச் சமர்ப்பித்துள்ளன என்றும்—

எதிர்வரும் 26 ஆம் திகதி அவை திறக்கப்பட்டு முடிவு செய்யப்படவிருக்கிறது என்றும் — பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரச்சபை இந்தக் கேள்விகளை ஆராய்ந்து கப்பல்களைத் தெரிவு செய்யும். (இ-3-10)

### 'லங்கா முடித்த'...

(முதலாம் பக்கத் தொடர்)

முகாமில் தங்கியுள்ள 616 பேரும், பொது மக்களில் 600 பேரும் வரவிருக்கின்றனர்.

அதேநேரம்—அடுத்த கப்பலில் வருவதற்காக மன்னாரில் இருந்து 300 அகதிகள் இன்று திருமலைக்கு அழைத்துவரப் படவிருக்கின்றனர்.

(இ—3)


நாளைய வெளியீடு!
புதிய வீடியோ CD
சரத்குமார்-ரோஜா
சின்னத்துரை
ரகுமான் - வனிதா
தேவி
நைட்
வீடியோ
உரும்பிராய்.
(64077)


### தள்ளாடி...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த டிரக்குகள் பல மோட்டார் ஷெல்களுடன் தீப்பிடித்துக் கொண்டன. எரிபொருள் களஞ்சியமும் தீப்பிடித்ததாக கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகள் இந்த நவீன றொக்கெட் லோஞ்சர்களை சமீபத்தில் வெளிநாடு ஒன்றில் கொள்வனவு செய்து கிழக்குக் கடல்மூலம் கடத்தி வந்திருக்கலாம் என்று படை வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் ஆட்லறித் தாக்குதல்களில் சேதம் அடைந்த படையினரின் வாகனங்களில் 9 பீரங்கி வாகனங்கள் நான்கு இலகு வாகனங்கள் ஆகியவையும் அடங்கும்.

விடுதலைப் புலிகள் பதினொரு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள விடத்தல்தீவில் இருந்தும் ஏழு கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பாப்பாமோட்டையில் இருந்தும் இந்த ஆட்லறித் தாக்குதல்களை நடத்தியதாக படை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஈழ யுத்தத்தில் முதல் தடவையாக விடுதலைப் புலிகள் தமக்கு இழப்பு எதுவும் இன்றி இந்தத் தாக்குதலை நடத்தி இருப்பதாகவும்—

இந்தத் தாக்குதலில் பதினொரு படையினரும் மூன்று குடி மக்களும் கொல்லப்பட்டனர் என்றும்—

15 படையினரும் 4 குடி மக்களும் காயம் அடைந்தனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-10)

## இலங்கைபடையினரிடமிருந்து தமிழக மீனவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்

### ஜெயலலிதா கோரிக்கை

சென்னை, மார்ச் 22

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதை நிறுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அ.தி.மு.க. தலைவியும் முன்னாள் முதலமைச்சருமான செல்வி ஜெயலலிதா மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், தமிழக அரசு இந்த விடயத்தில் அக்கறை காட்டவில்லை என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

மீன்பிடிக்க நடுக்கடலுக்குச் செல்லும் மீனவர்கள் இலங்கைக்கடற்படையினரால்தாக்கப்படுவதால், அச்சம் காரணமாக ஆயிரக்கணக்கான மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்வதில்லை. இதனால் பட்டினி நிலையில் அவர்கள் அல்லற்படுகிறார்கள்,

ஆகவே தமிழக அரசு உடனடியாக மத்திய அரசுடன் பேசி மீனவர்களின் நலனை பாதுகாக்க உதவவேண்டும்— என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

(இ-3-க)

## வீதி விபத்துக்களில் நால்வர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ். குடாநாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வீதி விபத்துச் சம்பவங்களில் நேற்று முன்தினம் நால்வர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

அல்லைப்பிட்டி, மண்கும்பான் வீதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களான ஊர்காவற்றுறையைச் சேர்ந்த என். கருணன் (வயது 26), இணுவில் கிழக்கு காரைக்காட்டைச் சேர்ந்த அப்பையா சண்முகநாதன் (வயது 40), அரியாலை முள்ளி வீதியைச் சேர்ந்த அருளப்பு ஞானப்பிரகாசம் (வயது 42) ஆகியோரும் வட்டுக்கோட்டை மாவடியில் ஓட்டோ ஒன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் சங்கரத்தையைச் சேர்ந்த சம்பந்தன் இராசரட்ணம் (வயது 45) என்பவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

(இ-15)

## வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 22

வலி - வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் குறிப்பிட்ட பிரதேசத்தை சுவீகரிக்க அரசு எடுக்கும் முயற்சிக்கு எதிராக வழக்குத் தொடரக் கொழும்பில் நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்க் கட்சிகளும், இந்து அமைப்புக்களும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன என்றும் —

இது தொடர்பாகச் சட்டவல்லுநர்களுடன் ஆராய்ந்து வருவதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## ஈழ அகதிகள் தங்கி இருந்த முகாமில் தீ!

சென்னை, மார்ச் 22

திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்துள்ள ஈழ அகதிகள் முகாமில் நேற்று முன்தினம் மாலை திடீரென தீவிபத்து ஒன்று ஏற்பட்டது.

ஒரு குடிசையில் அடுப்புப் பற்ற வைத்த சமயம் ஏற்பட்ட தீ பரவி அந்த முகாமில் அமைந்திருந்த 85 குடிசைகளும் எரிந்து சாம்பராகின.

இந்த விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

(இ-3)

### கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

டங்களில் உள்ள சகல சபைகளுக்கும் தேர்தல் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-21)

## கிரிக்கெட்

நாக்பூர், மார்ச் 22

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையில் நடைபெற்று வரும் 50 ஓவர் ஒரு நாள் ஆட்டங்களில் இன்றைய ஆட்டத்தில் இலங்கை அணியும், இந்திய அணியும் மோதவிருக்கின்றன.

(இ—3)

## ஆசிரியர் பயிலமர்வு

குருநகர், மார்ச் 22

யாழ். வலயக் கல்விப் பாடசாலைகளில் ஆண்டு 7 ஆம் 8 ஆம் வகுப்புக்களில் வாழ்க்கைத் திறன் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிலமர்வு எதிர்வரும் 25ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும்.

இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள உள்ள ஆசிரியர்களின் பெயர் விவரங்களை அனுப்பி வைக்குமாறு யாழ். வலயக் கல்வித்திணைக்களம் பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளது.

(இ-15)

## பருத்தித்துறையில் விசாரணை

நெல்லியடி, மார்ச் 22

யாழ்ப்பாணம் வந்துள்ள காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு தனது விசாரணைகளை இன்றும் நாளையும் காலை 9-00 மணி முதல் பருத்தித்துறையில் நடத்தவிருக்கின்றது.

(இ-3-109)


JAFFNA
TECHNICAL INSTITUTE
Reg. No. 15251
JAFFNA, SRI LANKA.
தொழிற் பயிற்சிகள்

RADIO, T.V and VIDEO DECK REPAIRING
சகல இன றேடியோ, ரீ.வி, வீடியோ டெக் மற்றும் எலெக்ரோனிக் உபகரணங்கள் என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 9 மாதங்கள்)

MOTOR REWINDING and ELECTRICAL WIRING
சகல இன மோட்டர், [F] பான், ரான்ஸ்போமர்கள் றீவைன்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின் இணைப்பு முறை என்பன பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 6 மாதங்கள்)

MOTOR CYCLE MECHANISM
சகல இன மோட்டார் சைக்கிள், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்
(காலம் 5 மாதங்கள்)

AIR CONDITIONING and REFRIGERATION
சகல இன குளிர்சாதனப்பெட்டி மற்றும் ஏயர் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும்.
(காலம் 6 மாதங்கள்)

CITY and GUILDS of LONDON EXAM
(i) POWER (ii) ELECTRONICS

SPECIAL ENGLISH CLASSES
(i) TOEFL (ii) SPOKEN
(iii) NCE (iv) PET (Preliminary English Testing)

புதிய பயிற்சிகள் ஆரம்பம்:
29-03-1999 (கிழமை நாள்களில்) 28-03-1999 (சனி, ஞாயிறு நாள்களில்)
Note: தொழிற்பயிற்சிகள் முடித்த மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
மேலதிக விவரங்களுக்கு நேரில்.

— DIRECTOR
52/1, STANLEY ROAD, JAFFNA.
(றெயில்வே கடவை அருகில்)
7, PALALY ROAD, JAFFNA.
(64058)


## றெலோ அமைப்பாளரின்...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்று முன்தினம் இரவு 8,30 மணியளவில் அவரது வீட்டுக்குச் சென்ற சிலர் அவரை பலாத்காரமாகக் கடத்திச் சென்றனர் என்றும் —

நேற்றுக்காலை அவரது சடலம் சூட்டுக் காயங்களுடன் கண்டு பிடிக்கப்பட்டது என்றும் — தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை புளொட் அமைப்பின் மகளிர் அணியைச் சேர்ந்த வேலாயுதம் பவானிதேவி என்பவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக இவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (இ-3)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22-03-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org